வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 18

# எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்

## (Professional Ethics in MGR Movies)

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – *18*

# எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்

## (Professional Ethics in MGR Movies)

*முனைவர் செ. இராஜேஸ்வரி* **M. A., M. Phil., Ph. D.,**

***சந்திரோதயம் பதிப்பகம்***
*மதுரை, Mob.:7010997639.*

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் வரிசை | : | வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 18 |
| நூலின் பெயர் | : | எம்.ஜி.ஆர். படங்களில் தொழில்தர்மம் |
| ஆசிரியர் | : | முனைவர் செ. இராஜேஸ்வரி |
| துறை | : | சினிமா, சமூகம் |
| வடிவமைப்பு | : | செ. மீனாட்சி |
| பதிப்பாளர் | : | சந்திரோதயம் பதிப்பகம்<br>3/472, கம்பர் 2வது தெரு,<br>கம்பர் சாலை, தினமணி நகர்,<br>மதுரை – 625 018<br>தொலைபேசி எண் : 7010997639 |
| பதிப்பு | : | ஜனவரி 2020 |
| மொழி | : | தமிழ் |
| பக்கங்கள் | : | 116 |
| விலை | : | Rs.200/- |

- - - - -

| | | |
|---|---|---|
| *Book* | : | *Vetrithirumagan MGR – 18* |
| *Title* | : | *MGR Padangalil Thozhil Dharmam (Professional Ethics in MGR Movies)* |
| *Author* | : | *Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,* |
| *Subject* | : | *Cinema, Society* |
| *Cover Design* | : | *C. Meenatchi* |
| *Publisher* | : | *Chandrothayam Pathippagam*<br>*3/472, Kambar 2nd Street*<br>*Kambar Salai, Dinamani Nagar*<br>*Madurai – 625 018*<br>*Phone : 7010997639* |
| *Month of Publish* | : | *January 2020* |
| *Pages* | : | *116* |
| *Price* | : | *Rs.200/-* |

# அன்புக் காணிக்கை

பாரதரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின்

மருத்துவர் பி.ஆர்.எஸ். அவர்களுக்கு

இந் நூல் அன்புக் காணிக்கை.










மாதம் ஒரு வைரசும், விஷ காய்ச்சலும் பரவி வரும்
இக்காலத்தில் தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவிய
போது நில வேம்பு குடிநீரும், பப்பாளி இலைச்சாறும்
மிகச் சிறந்த நோய் எதிர்ப்பு தரும் மருந்துகள் என்பதை
சென்னை, கிங்ஸ் இன்ஸ்டிடியூட் மூலமாக நிரூபித்து
மக்களுக்கு இலவசமாக வழங்கிய

**எம்.ஜி.ஆரின் உண்மை தொண்டர்**

முன்னாள் சென்னை பெருநகர மேயர் ஆரோக்கியத்தின்
வழிகாட்டி **மனித நேயச் செம்மல் சைதையார்**

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!




நிலவேம்பு பூ

*அ.தி.மு.க.தொடங்கி ஆறே மாதத்தில் திண்டுக்கல்லில் போட்டியிட்டது . . .*

## அ.தி.மு.க.வெற்றி

**20–5–1973 அன்று ஓட்டுப்பதிவு நடந்தது. மறுநாள் ஓட்டுகள் எண்ணப்பட்டு, முடிவு அறிவிக்கப்பட்டது.**

**இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் மாயத்தேவர் வெற்றி பெற்றார்.**

**ஓட்டு விவரம்:–**

| | |
|---|---|
| மொத்த ஓட்டுக்கள் | 6,43,704 |
| பதிவான ஓட்டுக்கள் | 5,05,253 |
| மாயத்தேவர் (அ.தி.மு.க.) | 2,60,930 |
| சித்தன் (ப.காங்.) | 1,19,032 |
| பொன்.முத்துராமலிங்கம் (தி.மு.க.) | 93,496 |
| சீமைச்சாமி (இ.காங்.) | 11,423 |
| சூரியமுத்து (சுயே) | 9,342 |
| சேதுராமதேவர் (சுயே) | 695 |
| கோவிந்தசாமி (சுயே) | 687 |
| வரததேசிகன் (சுயே) | 502 |
| அங்கண்ண செட்டியார் (சுயே) | 448 |
| செல்லாதவை | 8,698 |

அ.தி.மு.க.வுக்கு அடுத்த இடத்தை காமராஜரின் பழைய காங்கிரஸ் பெற்றது. இ.காங்கிரஸ் வேட்பாளரும், சுயேச்சை வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

## இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவுடன் எம்.ஜி.ஆரின் கொடுத்த பேட்டி:

*'கணையாழி' இதழுக்காக கி.கஸ்தூரி ரங்கன் எம்.ஜி.ஆரை சந்தித்து எழுதியது.*

*வாகினி ஸ்டுடியோவின் ஏர் கண்டிஷன் அறை, சலூனில் இருப்பது போல சுழல் நாற்காலி, எம்.ஜி.ஆருக்கு 'மேக்-அப்' நடந்தது. உள்ளே நுழைவோரை ஓரக்கண்ணால் பார்த்தார் எம்.ஜி.ஆர்.,*

*'வந்துட்டீங்களா . . . . ஒரு நிமிஷம் அப்படியே உக்காருங்க . . . .'*

*'மேக்-அப்' மேன் சிரத்தையுடன் கவனமாக எம்.ஜி.ஆர்., முகத்தில், ஏதேதோ பூசினார். தலையில் கிரீடமும், காதில் குண்டலம், ஜோரான அரும்பு மீசை மற்றும் ஜிகினா வேலைப்பாடுகள் நிறைந்த ராஜகுமாரன் உடை!*

*கனவுலகில், 'டூயட்' பாடும் காட்சி அன்று படமாக்கப்படவிருந்தது. ராஜகுமாரனாக எம்.ஜி.ஆரும், ராஜகுமாரியாக லதா, படம் உரிமைக்குரல், இயக்குனர் ஸ்ரீதர்.*

*எம்.ஜி.ஆர்., நாற்காலியில் இருந்து இறங்கினார். கண்ணாடியில் அழகு பார்த்தவாறே, 'சொல்லுங்க. . .' என்றார்.*

*யாரை என்ன சொல்ல சொல்கிறார் என்று ஒரு கணம் திகைத்தோம் என் பக்கம் திரும்பி, புன்னகை*

*செய்தபடியே, 'பேட்டியை ஆரம்பிக்கலாமா?' என்பது மாதிரி பார்த்தார்.*

- *உங்களுக்கு மட்டும் இத்தனை பாப்புலாரிடி ஏன்?*

*நான், வாழ்க்கை வேறு, நடிப்பு வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. எப்படி வாழ வேண்டும் என்று நினைக்கிறேனோ, அதே போல் படத்தில் நடிக்கிறேன். நல்ல மனிதனாக வாழ வேண்டும்; உழைத்து சாப்பிட வேண்டும்; நல்ல கொள்கைகளுக்காக போராட வேண்டும்; நல்ல கருத்துகளை மக்களிடையே எடுத்துரைக்க வேண்டும். இதையெல்லாம் வெளியிடக்கூடிய, வாய்ப்புள்ள கதையையே தேர்ந்தெடுக்கிறேன்.*

- *மற்ற நடிகர்கள் யாரும் இதை செய்வதில்லையா?*

*செய்கின்றனர்... ஆனால், என்னைப் போல மக்களுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் என்னை ஒரு அங்கத்தினராகவே ஆக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன். அதனால் என்னால் தங்கள் வாழ்க்கையில் ஏதோ நல்ல மாற்றம் வரும் என்று ஒவ்வொரு குடும்பத்தினரும் நினைக்கின்றனர். நான் மது அருந்துவதில்லை, புகைப்பதில்லை, காபி, டீ கூட குடிப்பதில்லை. அதனால், என்னுடைய, 'இமேஜ்' மக்களிடையே ஓங்கி இருக்கிறது.*

- *அரசியல் ரீதியில் கொள்கை வழிப்படி எத்தனை பேர் உங்களை வழிபடுகின்றனர்? உங்களுக்கு இருப்பதெல்லாம் சினிமா கவர்ச்சியால் ஏற்பட்டுள்ள செல்வாக்குதான் என்று கூறுகின்னறரே...*

*அப்படியானல், மற்ற நடிகர்களும் கட்சிகள் ஆரம்பித்து விடலாமே? அப்படி அவர்கள் ஆரம்பித்தால், என்னளவு செல்வாக்கு பெற முடியுமா?*

- *உங்கள் கட்சிக்கு ஆதரவு மங்கி வருவதாக . . .*

*அதெல்லாம் வீண் பிரசாரம்; கட்சி ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் கூட ஆகவில்லை. இன்று, என் கட்சியில், 17 லட்சம் தொண்டர்கள் இருக்கின்றனர். 20 ஆண்டுக்கு முன், அண்ணாதுரை தி.மு.க.,வை ஆரம்பித்த போது கூட இந்த அளவுக்கு, வேகமான வளர்ச்சியை பெறவில்லை.*

- *நீங்கள் தி.மு.க.,வை விட்டு வெளியே வந்து விட்டீர்கள், நீங்கள் இல்லாமல் போனதால், அக்கட்சிக்கு எவ்வளவு தூரம் செல்வாக்கு குறைந்து விட்டது?*

*நான் இருப்பதும், இல்லாததும் முக்கியமில்லை. அவர்களே தங்கள் கட்சிக்கு குழி பறித்து கொண்டனர். எல்லாம் கலகலத்துப் போன நிலையில் தேர்தல் நடந்தால், தோல்வி நிச்சயம் என்ற கவலையில், கட்சித்தலைமை இருக்கிறது. இதற்காக, என் செல்வாக்கை உடைக்க ஏதேதோ செய்தனர். அது, பலிக்காமல் போனதால், என்னுடன் சமரசம் செய்து கொள்ள, தூதுவர்களை அனுப்பினார், கருணாநிதி; நான் இணங்கவில்லை.*

- *இன்னும் பெருமளவு எம்.எல்.ஏ.,க்கள் கருணாநிதியின் பக்கம் தானே இருக்கின்றனர்?*

பதவியில் இருப்பதால் எல்லாரையும் மிரட்டி உருட்டி, தம் பக்கம் வைத்துள்ளார், கருணாநிதி. ஆனால், தி.மு.க.,வில் உள்ள பல எம்.எல்.ஏ.,க்கள், என் நண்பர்கள். தக்க சமயத்தில் என் பக்கமே வந்து விடுவர்.



## நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல்

ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார்.

*மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.*

*தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.*

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. **வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,**
2. **எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,**
3. **சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),**
4. **வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,**
5. **மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,**
6. **எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,**
7. **எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,**
8. **ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,**
9. **வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,**
10. **நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],**
11. **பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],**
12. **இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,**

13. **முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்**

14. **இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.**

15. **எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு *[MGR Science Fiction Films]***

16. **படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு**

17. ***Unique Fandom of MGR*** *(எம்.ஜி.ஆர். பற்றிய ஆங்கில நூல்)*

18. **எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்**
**(Professional Ethics in MGR Movies)**
*ஆகியவை வெளிவந்துள்ளன.*

*தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின்* **பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி** *என்ற கவிதை நூல்களை இவர் முறையே* ***"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You Language of Love, and A Lady at the little gate",*** *என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

*தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப்* **பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் *[*திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்*]*** *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.*

*சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள்* ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளி வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய* ***"என்னோட ராசி நல்ல ராசி"*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில்* ***'மர வழிபாட்டின் வேர்களைத் தேடி (Deep into the roots of Tree worship), காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு'*** *போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.*

## உள்ளடக்கம்




வடவனூரில் சைதையார் அவர்களால்
புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். இல்லத்தில் நூலகம்




வடவனூரில் எம்.ஜி.ஆர். பெற்றோரின்
உருவச்சிலை

# *1. எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மமும் அவரது அறநெறிப் புரட்சியும்*

*தொழில் என்பது திறன் சார்ந்த தொழில் **[profession]** என்றும் முதல் போட்டு செய்யும் தொழில் **[business]** என்றும் இரு வகைப்படும். திறன் சார்ந்த தொழில் என்பது மருத்துவர், வழக்கறிஞர், ஆடிட்டர் போன்ற தொழில்களை குறிக்கும் இதற்குரிய அடிப்படைத் தேவை அத் தொழில் சார்ந்த உயர் கல்வித் தகுதியும், சிறப்பான பயிற்சியும் ஆகும். தொழில் தர்மம் அல்லது தொழில்சார் நெறிமுறை என்பது ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியாக வரையறுக்கப் பட்டுள்ளது. முதல் போட்டு செய்யும் தொழிலில் வியாபார உத்திகளும் நேர்மையும் கடைப்பிடிக்கப்படும்.*

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியமாண பட்டினப்பாலையில் வணிகம் என்பது*

*“கொள்வதும் மிகை கொள்ளாது*

*கொடுப்பதும் குறை படாது”*

விளங்க வேண்டும் என்று வணிகத்துக்கு உண்டான தொழில் தர்மம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு பொருளை பணம் வாங்கிக்கொண்டு விற்கும் போது வாங்கிக்கொள்ளும் பணமும் அதிகமாக இருக்க கூடாது கொடுக்கும் பொருளும் குறைவாக இருக்க கூடாது, என்பது பழந்தமிழர் பின்பற்றிய தொழில் தர்மம் ஆகும். பழந்தமிழர் பண்பாடு என்பதில் மக்களின் தனிநபர் ஒழுக்கமும் தொழில்சார் நெறிமுறைகளும் இணைந்து காணப்படுகின்றன.

தமிழில் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் என்ற இரண்டு பகுதிகளில் தனிமனித தொழில் அறநெறிகளை விளக்குகின்றது. இது தவிர வேறு பல பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் அறம் பற்றி பேசுகின்றன. ஆனால் ஆங்கிலத்தில் சாக்ரட்டீஸ் ஒருவரையே ஃபாதர் ஆஃப் தி எத்திக்ஸ் அறநெறியின் தந்தை என்கின்றனர். அவர் வகுத்த அறநெறிகளின் அடிப்படையைப் பின்பற்றி



அன்பே வா படத்தில் எம்.ஜி.ஆர்.

அவருக்குப் பின் வந்த அறிஞர்கள் அவற்றை மேம்படுத்தி எழுதி வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் தன்னுடைய கதாபாத்திரத்தை ஒரு முன்மாதிரி கதாபாத்திரமாக உருவாக்குவார். வக்கீல், மருத்துவர், விவசாயி, படகோட்டி, ரிக்ஷாக்காரன், குதிரை வண்டிக்காரன் என எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும் அதில் அவர் ஒரு முன்மாதிரி மனிதராக விளங்குவார். அவருடைய அனைத்துப் படங்களிலும் அவரது கதாபாத்திரம் தொழில் நெறி முறைகளைப் பின்பற்றும் முன்மாதிரி கதாபாத்திரமாக வடிவமைக்கப்படும். இந்நூலில் வக்கீலாக, தொழிலதிபராக, பத்திரிகையாளராக, பொறியாளராக மருத்துவராக அவர் நடித்துள்ள பாத்திரங்களில் பின்பற்றிய தொழில் நெறிமுறைகள் விளக்கப்படுகின்றன.

எம்.ஜி.ஆர். என்றால் அவர் ஓர் ஏழைப் பங்காளன்; தொழிலாளர்களின் நண்பன்; அவருடைய ரசிகர்கள் படிக்காத ஏழை மக்கள் என்ற கருத்து நிலவுகின்றது. இக்கருத்தை முறியடிக்கும் வகையில் அவருக்கு நிறைய படித்த ரசிகர்கள் இருக்கின்றனர் என்பதை விளக்கும் முறையில் சில நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூலில் எம்.ஜி.ஆர். படித்தவராக வரும் படங்களில் அக்கதாபாத்திரங்கள் காட்டும் நேர்மை, தொழில் நெறிமுறை குறித்து விளக்கப்படுகிறது.

## தொழில் தர்மத்தின் வகைகள்

தொழில் தர்மம் அல்லது தொழில்சார் நெறிமுறையை அறிஞர் மூன்று வகையாக பிரிக்கின்றனர்.

1. கடமை சார்ந்ததாகும்,
2. அறநெறி சார்ந்ததாகும்,
3. பின்விளைவு சார்ந்ததாகும்.

## *1. கடமை சார்ந்த தொழில் தர்மம் [Duty oriented]*

சில தொழில்கள் கடமை உணர்ச்சியுடன் நாள், கிழமை, நேரம் பார்க்காமல் செய்யும் தொழில்களாக விளங்குகின்றன. காவலர் பணி, மருத்துவ பணி, தீயணைப்பு பணி, பேருந்து ஓட்டுனர் பணி ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இத்தொழில்களுக்கு நேரம் காலம் என்பதே கிடையாது. ஒரு மருத்துவர் இரவு 12 மணிக்கு ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது உயிருக்குப் போராடும் நோயாளிக்கு வேண்டிய சிகிச்சையைச் செய்ய வேண்டும் என்று அழைப்பு வந்தால் அவர் உடனே எழுந்து போய் உரிய சிகிச்சையை செய்தாக வேண்டும். இது அவருடைய தொழில் தர்மம் ஆகும்.



புதிய பூமி படத்தில் எம்.ஜி.ஆர்.

## *2. அறநெறி சார்ந்த தொழில் தர்மம் [Ethics oriented]*

ஆசிரியப் பணி அறநெறி சார்ந்த தொழில் தர்மத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். ஆசிரியர் தொழில் என்பது பாடங்களை மட்டும் நடத்திவிட்டு மாணவர்களுக்குத் தேர்வு வைத்து மதிப்பெண் அளிப்பதோடு நின்றுவிடாது. மாணவர்களை சமுகத்துக்கு பயனுள்ள வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்தவர்களாகத் தயார்படுத்தும் அவர்களை நல் வழிப்படுத்திப் புத்தி புகட்டும் தொழிலாகும். இத்தொழிலை ஆசிரியர் தனக்குத் தரும் சம்பளத்தை மனத்தில் வைத்துக்கொண்டு செய்யக் கூடாது.

ஆசிரியர் தொழிலுக்கு அரசுப் பள்ளிகளில் கல்லூரிகளில் வழங்கும் சம்பளத்தை விட பத்து மடங்கு குறைவாக தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்கினாலும் தாம் பெறுகின்ற குறைந்த சம்பளத்துக்காக அவர்கள் தமது தொழில் தர்மத்தைக்



‘ஆனந்த ஜோதி’யில் மாணவர்களுடன் எம்.ஜி.ஆர்.

குறைத்துக் கொள்ளக்கூடாது, குறைத்துவிட முடியாது. தனியார் கல்வி நிலையங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு மிகச் கல்வியையும் ஒழுக்கத்தையும் சிறப்பாகப் புகட்ட வேண்டும்.

### *3. பின் விளைவு சார்ந்த தொழில் தர்மம்* *[ Consequence oriented ]*

வக்கீல் பணி, பொறியாளர் பணி, மருத்துவர் பணி போன்றவற்றைப் பின்விளைவு சார்ந்த தொழிலுக்கு எடுத்துக்காட்டாகும். வக்கீல்கள் தம்முடைய கட்சிக்காரர்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் வழக்கை நடத்தவில்லை என்றால் காட்டவில்லை நிரபராதியான இவரது கட்சிக்காரருக்குத் தண்டனை கிடைக்கும்.

பொறியாளர்கள் நாம் கட்டும் கட்டடங்களைத் தரமான பொருட்களைக் கொண்டு உறுதியாக கட்டவில்லை என்றால் அந்தக் கட்டடம் இடிந்து விழுந்து, மிகப் பெரும் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தும். இதனால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதை உணர்ந்து தன்னுடைய தொழிலை அற நெறியுடன் செய்ய வேண்டும். இக்கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் எம்.ஜி.ஆர். தந்து கதாபாத்திரங்களைத் தொழில் தர்மம் காக்கின்ற முன்னோடி கதாபாத்திரங்களாக வடிவமைத்தார்.

அறிஞர் பெருமக்கள் தொழில் நெறிமுறை அல்லது தொழில் தர்மம் என்பதை வேறொரு வகையிலும் பிரிக்கின்றனர்.



கொடுத்துவைத்தவள் படம் - எம்.ஜி.ஆர்., எம்.ஆர்.ராதா

1. **சுயாட்சி அல்லது சுய முடிவு** [*Autonomy*] - இத் தொழில் நெறிமுறை பயனாளியின் உரிமைகளை மதிக்கின்றது. ஒரு தொழிலின் மூலமாக பயன் பெறும் ஒருவர் அத்தொழில் குறித்த முடிவுகளை அவரே எடுக்கும் உரிமை பெற்றிருக்கிறார். மருத்துவ சிகிசைக்கு வரும் ஒரு நோயாளி தனக்கான சிகிச்சையை அவரே முடிவு செய்ய வேண்டும்.

2. **தீமையற்ற நிலை** [*Non maleficence*]- ஒரு வக்கீலோ, மருத்துவரோ கணக்காளரோ தனது பயனாளிக்கு தனது சேவையின் பலனைப் பெறுகின்ற அவருக்கு தீமை வரக்கூடிய செயல்களில் ஈடுபடுவது ஆகாது.

3. **நன்மை [Beneficence] -** தொழில் திறன் படைத்த ஒருவரின் மூலமாக சேவையைப் பணம் கொடுத்துப் பெறும் பயனாளிக்கு அவரால் நன்மை மட்டுமே கிடைக்க வேண்டும்.

**4. நீதி [Justice] –** ஒரு தொழிளில் தேர்ச்சி பெற்றவர் தனது திறமையைக் கொண்டு பயனாளிக்கு

வழங்கும் சேவையானது நேர்மையானதாக சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

*5.* ***உண்மைத்தன்மை [Fidelity]-*** தொழில் திறன் படைத்த வக்கீல், மருத்துவர், பத்திரிகையாளர் போன்றோர் தன்னுடைய திறனால் பயன்பெறும் மக்களுக்கு உண்மையான சேவையை வழங்க வேண்டும் இதில் புரட்டு பித்தலாட்டம் இருக்கக்கூடாது.

### ***தொழில் தர்மத்தின் விதிமுறைகள்***

***1. தொண்டுள்ளம் [Mission]:*** தொழில் தர்மத்தின்படி இருந்து தன்னுடைய சேவைக்கான ஊதியத்தை பெற்றுக்கொண்டு உதவுவோர் நாம் பணத்துக்காக் மட்டும் இப்பணியைச் செய்யவில்லை அவருக்கு நன்மை செய்ய கடமைப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும்.

### ***எம்.ஜி.ஆரின் தொழில் தர்மமும் தொண்டுள்ளமும்***

இன்றைய கதாநாயக நடிகர்களிடம் தொண்டுள்ளம் காணப்படவில்லை. எம்.ஜி.ஆர். பணம் வாங்கிக் கொண்டு நடித்தாலும் அவர் தனது படங்களைப் பார்க்கும் மக்களுக்கு நல்லவற்றை மட்டும் அளித்து மகிழ்விக்க வேண்டும். நம்பிக்கை ஊட்டும் காட்சிகளைக் காட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததால் அவரது தொண்டுள்ளம் மக்களிடையே பெருமதிப்பைப் பெற்றது.

### ***எம்.ஜி.ஆரைப் பின்பற்றிய ராமராஜன்***

ராமராஜன் எம்.ஜி.ஆரின் வழியைப் பின்பற்றியது இங்குக் குறிப்பிடத்தக்கது. கோடி ரூபாய் கொடுத்தாலும் பீடி குடிப்பது போல கூட



ராமராஜன்-நளினி திருமணத்தில் எம்.ஜி.ஆர்.

நான் நடிக்க மாட்டேன் என்று தயாரிப்பாளரிடம் உறுதியாக சொன்னவர் ராமராஜன். அதனால் அவர் கிராமத்து மக்களின் விருப்ப நாயகனாக விளங்கி ராமராஜன் கிராம ராஜன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றார். அவருடைய படங்கள் பூஜை அன்றே விற்றுப் போயின. அவர் அரசியலிலும் வெற்றி பெற்று அண்ணா திமுகவின் நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்தாண்டு காலம் மக்களுக்குச் சேவை செய்தார்.

***2. உண்மை [Truth]:*** சேவை வழங்குபவரும், சேவை பெறுபவரும் ஒருவருக்கொருவர் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அடுத்தவரை ஏமாற்றும் எண்ணத்துடன் இருவரும் பழகக் கூடாது.

***3. சட்ட ரீதியானது [Lawfulness] :*** தொழில் தர்மத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால் எந்த ஒரு தொழிலும் சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க

*வேண்டுமே தவிர சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கக் கூடாது.*

***4. ஒருங்கிணைப்பு [Integrity]:*** *தொழில் அறிவு பெற்று சேவை வழங்கும் ஒருவர் உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றுமாக செயல்படக்கூடாது. மானும் மொழியும் ஒருமைப்பட்டுச் செயல்பட வேண்டும்.*

***"நாவில் ஒன்று நினைவில் ஒன்றும்***

***இருப்பவன் மனிதன் அல்ல"***

*என்று எம்.ஜி.ஆர். ஆசைமுகம் படத்தில் அமைத்த பாடல் வரிகள் இந்த நெறி முறையைத்தான் சுட்டிக் சுட்டுகிறது.*

***5. சிறப்புத் தேர்ச்சி [Excellence]:*** *ஒரு தொழிலில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஒருவர் ஒரு பயனாளிக்குத் தன்னாலான சேவையை வழங்கும் போது அச் சேவையை ஏனோதானோ என்று செய்யக்கூடாது. பயனாளி தன்னால் இயன்றவரை சிறப்பாக அச் சேவையை வழங்கியாக வேண்டும்.*

### *பண்பு விதிமுறைகள்*

*தொழில் அல்லது தொழில் அறநெறி என்பது ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவர் தனிப்பட்ட விதிமுறைகளின் தொகுப்பாகும். வாழ்க்கையின் சிறந்த பண்புகள் மதிப்புகள் போன்றன ஒரு மனிதனுக்கும் தனித்தனியாக இருக்கலாம். ஆனால் தொழில் தர்மம் என்பது சமுதாயத்தினரால் ஒட்டுமொத்தமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும். இதனை பண்பு விதிமுறைகள் என்றும் குறிப்பிடுவர்.*

தொழில் தர்மம் அல்லது தொழில் நெறிமுறை என்பது ஒவ்வொரு தொழிலுக்கும் வேறுபட்டதாக இருந்தாலும் கூட பொதுப் பண்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை நேர்மை, நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை. ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கவேண்டிய பரஸ்பர மரியாதை, சட்டத்திற்கு, கட்டுப்பட்டு நடத்தல், பயனாளிக்கு நன்மை மட்டுமே செய்தல், தீமையை விலக்குதல். ஒருவர் தான் வழங்கும் சேவைக்கு பெற்ற ஊதியத்திற்கு மட்டுமே செயல்படுதல் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு தொண்டு மனப்பான்மையுடன் சேவை செய்வதாகும். இந்நடைமுறை பண்பு விதிமுறைகளைப் பின்பற்றுதல் ஆகும்

## தொழில் தர்மம் பற்றி அறிஞர்கள் கருத்து

தொழில் தர்மத்தில் வணிக தர்மம் என்பது முதல் போட்டு தொழில் செய்து அதனால் பெறும் லாபத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்நூற்றாண்டில் வணிகத்தின் அடிப்படை நோக்கமே அதிக லாபம் கிடைக்க வேண்டும் என்பதாகும். அதிக லாபம் பெற்றால் மட்டுமே போட்டி சந்தையில் தொடர்ந்து நிற்க முடியும் என்ற விதியை உலக மயமாக்கல் கொள்கையைப் பின்பற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வரையறுத்து உள்ளன. மிக்ஸில்டன் ஃபிரேயிட்மேன் என்பவர் தொழில் தர்மம், அறநெறி என்பவையெல்லாம் தனி மனிதனுக்கு தேவையே தவிர நிறுவனங்களுக்கு அல்ல என்பார்.

சில பொருளாதார நிபுணர்கள் அறநெறி இல்லாத பொருளாதாரம் கேலி படத்தை **[caricature]** ஒத்ததாகும். பொருளாதாரச் சிந்தனை இல்லாத

நெறிமுறைகள் தேவதைக் கதைகளுக்கு *[fairy tales]* நிகரானது என்பர்.

பொருளும் அன்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல ஒருவரிடம் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பயன் அடைகிறோம் என்பதற்காக தன்னுடைய பண்புகளை எவரும் இழக்கக்கூடாது. என்று அறவியலார் கருதுவர்.

**தொழில் தர்மத்தைப் பின்பற்றச் செய்வது எப்படி?**

டாக்டர் விவென்சியோ பலானோ என்பவர் வியாபாரம் செய்வதில் முக்கிய குறிக்கோள் லாபம் ஈட்டுவது அல்ல மக்களுக்கு சேவை செய்வதே என்றார். வெய்னே டைனர் என்பவர் மக்களிடம் தொழில் நெறி முறைகளை வலியுறுத்துவதை விட அறநெறிகளை கற்றுக் கொடுப்பதே சிறந்தது என்றார். விதிமுறைகளை வலியுறுத்துவது என்பது சட்ட திட்டங்களை உருவாக்கி தண்டனைகளை வரையறுத்து மக்களை அச்சத்தின் பேரில் அவற்றைப் பின்பற்ற செய்வதாகும். அவ்வாறு செய்வதால் பயன் ஒன்றும் கிடையாது. அறநெறிகளைச் சிறு வயது முதல் கற்பித்து அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் உருவாக்குவதே சிறந்தது. மக்கள் தாம் மனதார ஏற்றுக் கொள்ளும் நெறிகளை வாழ்க்கையில் பின்பற்றுவது உறுதி.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் தான் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தை தொழில் தர்மம் பேணுகிறவராக உருவாக்கினார். ரிக்க்ஷாக்காரன் படத்தில் ரிக்க்ஷா ஓட்டும் தொழிலாளி ஒருவர் தன் வண்டியில் பயணிக்கும் இளம்பெண்ணை பாதுகாப்பாக

அழைத்துச்சென்று அவர் போக வேண்டிய இடத்திற்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற அறநெறிக் கருத்தை காட்டியிருப்பார். இது கற்பிக்கப்பட்ட அறநெறி அல்ல. எந்த நூலும் எந்த ஆசிரியரும் 'உன்னுடைய வண்டியில் பயணிப்பவரை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டியது உன்னுடைய கடமை என்று போதிக்கவில்லை.

எம்.ஜி.ஆர். ரிக்க்ஷாக்காரருக்கென புதிய ஒரு தொழில் தர்மத்தை தனது படத்தின் வழியாக உருவாக்கிக் காட்டுகிறார். எம்.ஜி.ஆர். இளம் பெண்ணுக்கு ஏற்படும் ஆபத்துக்களைச் சந்தித்து பயணிக்கு பாதுகாப்பான பயணத்தை அளிக்க முன்வந்தபோது படம் பார்த்த மக்கள் ஒவ்வொரு ரிக்க்ஷாக்காரரும் இதுபோன்ற பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணத் தொடங்கினர். ரிக்க்ஷாகாரர்களும் படத்தில் எம்.ஜி.ஆரைப் பார்த்து இப் பொறுப்புணர்ச்சியைக் கற்றுக்கொண்டனர்.

எம்.ஜி.ஆர். ரிக்க்ஷாக்காரன் படத்தில் வண்டிகளை வரிசையாக நிறுத்த வேண்டும்; பயனாளி வந்து கேட்கும் போது ஒவ்வொரு வண்டியாக வரிசையாக போகவேண்டும் என்று நெறிமுறைப்படுத்தினார். அவர்கள் ஒருவரோடு ஒருவர் முண்டியடித்துக்கொண்டு பயணிக்கு தொந்தரவு தரக்கூடாது என்றும் ஒரு நெறி முறையை உருவாக்கினார். மேலும் வண்டியில் ஏறும் போது ஒரு தொகையும் இறங்கும் போது கூடுதலாக வேறு தொகையும் கேட்கும் பழக்கம் இருந்ததனால், இக் குழப்பமும் துன்பமும் பயணிக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக சுவரில் ஒவ்வொரு இடத்துக்கும்



ரிக்ஷாக்காரன் – மஞ்சுளா, சோ , எம்.ஜி.ஆர்.

கட்டணம் எவ்வளவு என்பதை எழுதிய அட்டவணையையும் புதிதாக அறிமுகம் செய்தார்.

படம் பார்த்த ரிக்ஷாகாரரர்கள் எம்.ஜி.ஆரைப் பின்பற்றி தங்களின் நிறுத்தத்திலும் ஒரு அட்டவணையை உருவாக்கினர். வண்டிகளை வரிசையாக நிறுத்தி பயணிகள் வந்தபோது ஒன்றுக்கு அடுத்து ஒன்றாக எடுத்துச் சென்றனர். ஆக ரிக்ஷாக்காரன் படம் ரிக்ஷாக்காரர்களுக்கான தொழில் நெறிமுறைகளைக் கற்றுக்கொடுக்கும் பாட நூலாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது.

தொழிலாளி படத்தில் பேருந்து நடத்துனராக வரும் எம்.ஜி.ஆர். அக்காலகட்டத்தின் பழக்கப்படி உள்ளே பேருந்தில்; இடமில்லை என்ற சூழ்நிலையில் தன் அம்மாவை கூட பேருந்தில் ஏற்ற மறுத்துவிடுவார். ஒருவர் தான் செய்யும் தொழில்



தொழிலாளி – எம்.ஜி.ஆர்., நாகேஷ், S.N.லெட்சுமி

எதுவாக இருந்தாலும் அத்தொழிலுக்குரிய நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை கதாபாத்திரங்களின் மூலமாக வரையறுத்து எடுத்துக் காட்டுவது எம்.ஜி.ஆர். பின்பற்றி வந்த தொழில் தர்மம் ஆகும்.

**நடிகரிலிருந்து தலைவர் வரை**

எம்.ஜி.ஆர். தன் படங்களில் தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரங்களைச் சமூக பொறுப்புணர்ச்சியுடன் முன்மாதிரி கதாபாத்திரங்களாக அமைத்ததனால் படம் பார்த்த பலரும் அவரைப் பின்பற்றி நடக்கத் தொடங்கினர். இரசிகர்கள் எம்.ஜி.ஆரைத் தலைவராக ஏற்றுக்கொண்டனர். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் அவர் பேசிய 'அவர்கள் இரசிகர்கள்] என்னைத் தலையாக நினைக்கின்றனர், நான் அவர்களை என் உயிராகக் கருதுகிறேன்' என்ற வசனத்தைப் போல அன்று முதல் இன்று வரை எம்.ஜி.ஆறும் அவரது இரசிகர்களும் உயிரும் உடலுமாக உண்மையாக இருக்கின்றனர்.

## தொழில் நெறிமுறையின் தேவை

ஆல்பர்ட் கேம்ஸ் என்ற அறிஞர் அறநெறி இல்லாத மனிதன் ஊருக்குள் அவிழ்த்து விடப்பட்ட காட்டு விலங்குக்கு ஒப்பானவன் என்கிறார். அறநெறி என்பது ஒரு ஆற்றின் இருபுறமும் காணப்படும் ஆற்றங்கரைக்கு நிகரானது. ஏரிக்கரை, கண்மாய்க் கரை, குளக்கரை ஆகியவற்றின் கரைகள் தண்ணீர் ஊருக்குள் பாய்ந்து சேதப்படுத்தி விடக்கூடாது அத்தண்ணீரை நீண்ட காலத்துக்கு முறையாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக எழுப்பப் பட்டவையாகும். அவ்வாறு அறநெறி என்பது மனிதரையும் சமுதாயத்தையும் முறைப் படுத்துகின்ற பணியைச் செய்கின்றது.

தொழில் தர்மம் அல்லது நெறி முறை என்பது இலாபத்தில் அல்லது பணத்தில் மட்டும் பேராசை கொண்ட மனிதனுக்கு மாட்டப்படும் கடிவாளம் ஆகும். நெறிமுறைகளை உருவாக்கி அதனை மக்கள் பின்பற்றும்படி செய்பவனே அந்த மக்களுக்கு நல்வழி காட்டும் தலைவன் ஆவான். அவ்வகையில் எம்.ஜி.ஆர். தன் கதாபாத்திரங்களின் மூலமாக ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய அறநெறிகளைக் கற்பித்து மக்களை நன்னெறியில் வழிநடத்திச் சென்ற சிறந்த தலைவராக விளங்கினார்.

படம் நடிப்பதில் எம்.ஜி.ஆருக்கென்று சமூகப் பொறுப்புணர்ச்சியும் வாழ்வியல் சிந்தனையும் கொண்ட சிறந்த நோக்கம் இருந்தது. அந் நோக்கம் என்னவெனில் தன் படத்தைப் பார்க்கும் மக்கள் மகிழ்ச்சி அடைந்தால் மட்டும் போதாது; நல்ல பல விஷயங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். அவர் ஒரு மேடையில் பேசும்போது

தான் இறந்த பிறகு எம்.ஜி.ஆர். என்ற ஒரு நல்லவன் வாழ்ந்தான் என்று பிற்காலத்தில் மக்கள் என்னைப் பற்றி குறிப்பிட்டால் அதுவே என் வாழ்வின் வெற்றி என்றார். அவரது நோக்கம் இன்று உண்மையாயிற்று. அவரை கெட்டவர் என்று சொல்ல எதிர்க்கட்சிகள் கூட அஞ்சும்படி அவர் நல்லவர் என்று எல்லோரிடமும் பெயர் பெற்று இருக்கின்றார்.

ஒரு நிறுவனத்தின் மேலாளர் என்பவர் தன் கீழ் வேலை பார்க்கும் பணியாளர்களை முழு நேரமும் முழு அர்ப்பணிப்போடு வேலை பார்க்கும் படி தூண்டிக் கொண்டே இருப்பார். ஆனால் தலைவர் என்பவர் மக்கள் தான் செய்யும் வேலைகளில் முழு அர்ப்பணிப்பும் முழுத்திறமையும் காட்டும்படி அவர்களை உருவாக்குவார். எம்.ஜி.ஆர். சமயம் சாராத ஒருவராக பொது நிலையில் நின்று



அனைத்துத் தரப்பு மக்களையும் நெறிமுறைப்படுத்தி அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் அருளாளராக நல்லாசிரியராக [பேச்சு வழக்கில் வாத்தியாராக] உயர்ந்தார். இக்கருத்தை ஓர் நிகழ்ச்சி யை குறிப்பிட்டுக்காட்டி உறுதி செய்யலாம்.

மூன்று சக்கர பாரவண்டி ஓட்டும் தொழிலாளி ஒருவர் நடிகர் அஜீத் வீட்டுக்குத் தனது வண்டியில் ஏணியை எடுத்துக்கொண்டு சென்றார். அஜித் வீட்டுக்குச் சென்றதும் அங்கிருந்த ஒருவர் ஏணியை மாடியில் கொண்டு போய் வைக்கும்படி கூறினார். இவரும் வைத்து விட்டு வந்தார்.

நடிகர் அஜித் இவரைக் கண்டதும் அதிக சுமை கொண்ட ஏணியை மேலே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்துவிட்டீர்கள் என்று பாராட்டியதோடு நிற்காமல் இவரைப்பார்த்து 'குடிப்பீங்களா' என்று கேட்டார். அதற்குப் பாரவண்டி ஒட்டி வந்த தொழிலாளி 'நான் எம்.ஜி.ஆர். இரசிகன், எனவே பீடி, சிகரெட், மது ஆகியவற்றைத் தொடமாட்டேன்' என்று பதில் கூறினார். இப் பதிலை கேட்டு வியந்த நடிகர் அஜித் குமார் இத்தொழிலாளியைப் பாராட்டிக் கூலியைக் கொடுத்து 'இப்படியே இருங்கள் உங்கள் தலைவரின் பெயரை காப்பாற்றுங்கள்' என்று சொல்லி கூடுதலாக 50 ரூபாய் கொடுத்து அனுப்பி வைத்தார். இன்றைக்கும் இத்தொழிலாளி மிகுந்த மகிழ்ச்சியுடன் இச்சம்பவத்தை நினைவு கூர்கிறார்.

எம்.ஜி.ஆர். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரங்கள் மூலமாக மக்களிடையே ஏற்படுத்திய நல்ல பல மாற்றங்கள் அவர் செய்த குறிப்பிடத் தக்க அறநெறிப் புரட்சி ஆகும்.

# 2. மருத்துவராக எம்.ஜி.ஆர்.

புதிய பூமி (1968), ஆயிரத்தில் ஒருவன் (1965), தர்மம் தலைகாக்கும் (1963) ஆகியவற்றில் எம்.ஜி.ஆர். மருத்துவராக நடித்திருக்கிறார். மூன்று படங்களிலும் அவர் மருத்துவத் தொழில் தர்மத்தைப் பின்பற்றுகின்ற சிறந்த மருத்துவராக அவருடைய கதாபாத்திரத்தை வடிவமைத்துள்ளனர். மருத்துவ சேவை செய்வோருக்கு எம்.ஜி.ஆரின் கதாபாத்திரங்கள் முன் மாதிரியாக உள்ளன.

**மருத்துவத் தொழில் தர்மம்**

மருத்துவர் தர்மம் குறித்து நான்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன,

1. தனக்குரிய சிகிச்சையைத் தெரிவு செய்வதில் அல்லது மருந்து எடுப்பதில் நோயாளிக்குப் பூரண உரிமை உண்டு,

2. மருத்துவர் நோயாளியின் நலனைக் கருதி மட்டுமே சிகிச்சை செய்யவேண்டும்,

3. நோயாளிக்குத் தீங்கு ஏற்படுத்தும் செயலில் மருத்துவர் ஈடுபடக்கூடாது,

4. நியாயமான நேர்மையான சிகிச்சையை மருத்துவர் நோயாளிக்கு வழங்க வேண்டும்.

இந்த நான்கு தர்மங்களையும் பின்பற்றினால் அவர் மிகச் சிறந்த மருத்துவர் என்று போற்றப்படுவார்.

**திருக்குறளில் உணவும் நோயும்**

வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் நோய், மருந்து, மருத்துவர் மற்றும் சிகிச்சை பற்றி தெரிவித்துள்ளார். நோய் காரணிகள் பற்றி குறிப்பிடும் போது உணவும் முக்கிய காரணி என்கிறார்.

“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளி முதலா எண்ணிய மூன்று”

என்ற குறளில் உணவு அளவுக்கு மிஞ்சி உண்டாலும் தேவையான அளவு உண்ணா விட்டாலும் நோய்



புதியபூமி – எம்.ஜி.ஆர்.

வரும் என்று வள்ளுவர் எடுத்தியம்புகிறார். இன்னொரு குறளில்

*“அற்றால் அளவறிந்து உண்க அஃதுதம்பு*

*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு”*

என்கிறார். இக்குறள் ஒருவன் நீண்ட காலம் நல்ல உடல்நலத்துடன் உயிர் வாழ வேண்டும் என்று விரும்பினால் அவன் அளவுடன் சாப்பிட வேண்டும், முன்பு சாப்பிட்டது செரித்து முடிந்து மீண்டும் பசி எடுத்த பிறகு உணவு உண்ண வேண்டும் என்ற இரண்டு முக்கிய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது. இக்கருத்தை தர்மம் தலைகாக்கும் படத்தில் எம்.ஜி.ஆர். ஒரு காட்சியில் விளக்கிக் படைத்து காட்டியிருப்பார்.

எம்.ஜி.ஆர். தர்மம் தலைகாக்கும் படத்தில் ஒரு இலவச மருத்துவமனை நடத்துவார். அங்கு சிகிச்சைக்கு வரும் ஏழை பணக்கார நோயாளிகளின் நோய்க்கு காரணமே ஒருவருக்குப் போதிய உணவு கிடைக்காததும் மற்றொருவர் அளவுக்கு அதிகமாக உண்டதும் தான் என்பதை படம் பார்க்கும் மக்களுக்கு எளிமையாகப் புரிய வைக்கும் ஒரு காட்சி வடிவமைக்கப்பட்டிருக்கும்.

அந்தக் காட்சி வருமாறு

**எம்.ஜி.ஆர். (டாக்டர்) :** (பரிசோதனை முடிந்த பிறகு) வாங்க, உடல் உழைப்பு இல்லாததாலதான் உங்களுக்கு ஜீரணக் கோளாறு ஏற்பட்டிருக்கு.

**நோயாளி (பணக்காரர்) :** அப்போ தினம் ஒரு நாலு மைல் நடக்கட்டுங்காளா?



தர்மம் தலைகாக்கும் – எம்.ஜி.ஆர்.

***எம்.ஜி.ஆர். :*** *சும்மா நாலு மைல் நடக்கிறதவிட நாலு பேருக்கு பிரயோஜனப்படுற மாதிரி ஏதாவதொரு வேலை செய்யுங்க. உடம்புக்கும் தேகப்பயிற்சி பண்ணுன மாதிரி இருக்கும், உள்ளத்துக்கும் தெம்பா இருக்கும்.*

*நோயாளி நன்றி சொல்லி போகும்போது . . .*

***எம்.ஜி.ஆர்.:*** *சார் ஃபீஸ் எங்க?*

***நோயாளி :*** *என்ன சார் இலவச மருத்துவமனைன்னு போட்டுருக்குது நீங்க வந்து ஃபீஸ் கேக்குறீங்க . . .*

***எம்.ஜி.ஆர். :*** *ம் . . . உங்களப்போல இருக்குறவுங்கள்ட்ட வாங்கி இலவசமாக இல்லாதவங்களுக்கு மருத்துவம் பாக்குறோம் புரியுதா? பத்து ரூபாய் கொடுத்துட்டு போங்க . . . நல்லா நடங்க.*

*அடுத்து வரும் ஏழை நோயாளியை பரிசோதித்துவிட்டு*

***எம்.ஜி.ஆர். :*** *ம்ம் உனக்கு மருந்து தேவையில்ல ஓய்வுதான் வேணும், இரண்டு நாள் நீ ஓய்வு எடுத்துக்கோ.*

***நோயாளி (ஏழை) :*** *அது எப்படிங்க முடியும், நான் வேலைக்கு போகலைன்னால் வீட்ல பிள்ளை குட்டிக எல்லாம் பட்டினியாய் கிடக்குமே.*

***எம்.ஜி.ஆர். :*** *நீ ஓய்வு எடுக்கலைனா இதயம் ரெம்ப பலவீனமாயிடும்.*

*(பணக்காரனிடம் வாங்கிய ஃபீஸ் பணத்தை அந்த ஏழைக்கு கொடுத்து . . .) இந்தா இத வச்சுக்கிட்டு பிள்ளகுட்டிகளுக்கு சாப்பாடு போடு, நீ நல்லா ஓய்வு எடு.*

***நோயாளி :*** *தர்மபிரபு, மகராசன் நீங்க நல்லா இருக்கனும்.*

### ***எம்.ஜி.ஆரும் உணவின் சிறப்பும்***

*எம்.ஜி.ஆர். உணவுக்கு தனது வாழ்வில் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். தான் சறிய கதாபாத்திரம்*



*தர்மம் தலைகாக்கும் – எம்.ஜி.ஆர்.*

ஏற்று பதினோரு வருடங்கள் நடித்து வந்த காலத்திலும் தன்னுடன் இருப்போருக்கு தாராளமாக தன்னால் இயன்ற வகையில் உணவு வழங்குவார். தன வீட்டுக்கு வந்தவர்களை எல்லாம் சாப்பிட வைத்தது அவருடைய தாயுள்ளத்தைக் காட்டியது. உணவும் ஆரோக்கியமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது என்பதில் மாறாத நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர். தான் சாப்பிடும் உணவையே தன்னுடன் படப்பிடிப்பில் இருக்கும் அனைவருக்கும் வழங்கும்படிச் செய்வார். சக நடிகர்கள் குடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார் என்பதை அறிந்தால் தக்கவரிடம் சொல்லி அவர் தனது உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது, என்று அறிவுரை சொல்லும்படிச் செய்வார். புதிய நடிகர்களுக்கு உடம்பைப் பேணுவது குறித்து நேரடியாக அறிவுரை வழங்குவார்.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் ஆரோக்கியமும் உடல் வலிமையையும் கொண்டவராகவே நடித்தார். நோய் தாக்கி படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் நோயாளியாக நடித்ததில்லை. ஆரோக்கியத்தின் அடையாளமாக *[ICON OF HEALTH]* விளங்கினார். அதனால் முதுமை காரணமாக அவர் சிறுநீரகம் செயலிழந்து மாற்று சிறு நீரகம் பொருத்தப்பட்ட போதும், மூளையில் ரத்தம் உறைந்து அதற்கு சிகிச்சை பெற்ற போதும் அவரது உடம்பு சிகிச்சைக்கு நன்கு ஒத்துழைத்தது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்று அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு முதல்வராகவே

திரும்பினார். இங்கு வந்தவுடன் தனக்குக் கிடைத்த சிகிச்சை மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாற்று சிறுநீரகம் பொருத்தியவர் யாராக இருந்தாலும் அவர் தொடர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்துகளை அவருக்கு இலவசமாக அரசு மருத்துவ மனைகளில் அளிக்கும்படி ஆணையிட்டார்.

எம்.ஜி.ஆர். தனது ஆட்சியில் தமிழகம் நோயற்ற உடல் நலம் நிறைந்த மக்கள் வாழும் புதிய பூமியாக



இருக்க வேண்டும் என்று திட்டமிட்டார். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை வாழ்வின் தாரக மந்திரமாக ஏற்றுக்கொண்ட எம்.ஜி.ஆர். எப்போதுமே ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளித்தார். குழந்தைகளுக்குச் சத்துணவு திட்டமும் முதியோர்களுக்கு மதிய உணவுத் திட்டமும் அவர் கொண்டுவந்ததற்கு முக்கிய காரணம் அவர் அனைவரும் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று கருதியதாகும். சித்த மருத்துவ அடிப்படையில் உணவே மருந்து என்ற கொள்கைப் பிடிப்புடன் வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர். தினமும் வேர்க்க வேர்க்க உடற்பயிற்சி செய்தல், வாரம் ஒரு முறை எண்ணெய் குளியல், மாதம் ஒரு முறை குடல் கழுவுதல், போன்றவற்றைத் தனது வாழ்வில் கடைப்பிடித்து வந்தார். முக்கியமான வேறு பல சுகவீனத்துக்கு ஆங்கில மருத்துவர்களையும் நாடினார். ஆரோக்கியமாகவும் இளமையாகவும் வாழ்ந்த எம்.ஜி.ஆர். தனது படங்களில் மருத்துவராக நடித்து ஆரோக்கியம் பற்றிப் பேசியது நமபகத்தன்மை உடையதாக மக்களுக்குத் தோன்றியதாள் படம் நல்ல வெற்றியைப் பெற்றது.

### மருத்துவப் பூசாரிகள் *[QUACKERS]*

ஒரு காலகட்டத்தில் உலகமெங்கும் பூசாரிகள் பலர் இறைவனின் பெயரால் நோயை குணப்படுத்துகிறோம் என்று ஏமாற்றி வந்தனர். அவர்களை ஆங்கிலத்தில் *QUACKERS* என்பர் *QUACKER* என்றால் ஏமாற்றுப் பேர்வழிகள், மருத்துவம் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் என்பது பொருள். ஆனால் அவர்களோ மருத்துவம் ஜோதிடம், வான சாஸ்திரம் போன்றவற்றில் தாம்

நிறைந்த அறிவு பெற்றிருப்பதாக மக்களிடம் நடித்துக் கொண்டிருந்தனர்.

உலகில் பல நாடுகளில் கிபி 1665 ஆம் ஆண்டு பிளேக் என்னும் நோய் தாக்கி ஏராளமானோர் உயிரிழந்தனர். அப்போது இந்தக் குவாக்கர்ஸ் எனப்படும் போலி மருத்துவர்கள் மருந்து மந்திரம் தாயத்து போன்ற சில பொருட்களைக் கொண்டு மந்திர உச்சாடனம் செய்து இந்நோயை குணப்படுத்த முடியும் என்று மக்களிடம் தமக்குத் தெரிந்த வித்தைகளைக் காட்டினர். அச் சமயத்தில் பிரிட்டிஷ் அரசு தான் ஆட்சி செய்து வந்த நாடுகளில் உள்ளூர் மருத்துவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது. இந்நடவடிக்கையில் சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி மருத்துவர்களும் சிறை சென்றனர். கைதுக்குப் பயந்த வேறு சிலர் மருத்துவத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு மாறிவிட்டனர். அலோபதி மருத்துவம் மட்டுமே புழக்கத்தில் நின்றது. மற்றவை மறைந்து போயின.

பகுத்தறிவு மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய அறிவு சென்று சேராத மலைக் கிராமங்களிலும் நாகரிகத்தின் சாயல் எட்டாத குக்கிராமங்களிலும் பூசாரிகள் மருத்துவமும் செய்து வந்தனர். அவர்கள் அலோபதி மருத்துவம் அல்லது ஆங்கில மருத்துவம் தமது பகுதிகளில் நுழைய முடியாதபடி கவனமாகச் செயல்பட்டனர். முறையான மருத்துவ சிகிச்சை பெற விடாமல் மக்களைக் கடவுளின் பெயரால் அச்சுறுத்தினர்.

புதிய பூமி என்ற படத்தில் எம்.ஜி.ஆர். கதிரவன் என்ற பெயரில் அலோபதி மருத்துவராக நடித்திருந்தார்.



புதிய பூமி – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்.

இவர் ஒரு விபத்து காரணமாக ஒரு கிராமத்தை வந்தடைவார். அங்கு பூசாரி ஒருவர் தன்னை ஆஞ்சநேய பக்தன் என்று சொல்லிக்கொண்டு அப்பாவி மக்களை கடவுள் பெயரால் மருத்துவம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றி கொண்டிருப்பார். கதிரவன் அம்மக்களுக்கு முறையாக சிகிச்சை அளிப்பார். பலர் விஷக் காய்ச்சலில் இருந்து பிழைத்துக் கொள்வார்கள்.

மலைக் கிராமத்து மக்கள் தாம் குணம் அடைவதைக் கண்டு இப்படி ஒரு மருத்துவர் நம்மிடையே இல்லையே என்று வருத்தம் அடைவர். கதிரவன் தன் ஊரான சென்னைக்குத் திரும்பியதும் அங்கு அவருடைய முறைப்பெண் ஒரு மருத்துவமனைக்கு உரிமையாளராகி அதற்குத் திறப்பு விழா நடக்கும்போது ‘அதில் கலந்துகொண்ட மலைக் கிராமவாசி ஒருவர் வியந்து போவார். அவர் எம்.ஜி.ஆரை பார்த்து . . .

***கிராமவாசி :*** *இன்னொரு ஆஸ்பத்திரியா? இந்த ஊர்லதான் ஒரு பெரிய ஆஸ்பத்திரி இருக்கே*

***எம்.ஜி.ஆர். :*** *ஒரு ஆஸ்பத்திரி என்ன இப்படி பல ஆஸ்பத்திரிகள் இருக்கு.*

***கிராமவாசி :*** *இப்படி ஒரு ஆஸ்பத்திரி எங்க ஊர்ல இருந்தால், நாங்க எத்தனை உயிரைக் காப்பாத்தியிருப்போம். அட எங்க ஊர்ல வேண்டாம் சுத்தியிருக்கிற கிராமங்கள்லயாவது இருக்கக் கூடாதா?*

***எம்.ஜி.ஆர். :*** *அப்போ அவங்களுக்கும் இந்த பூசாரிதான் டாக்டரா?*

***கிராமவாசி :*** *அது எங்க தலையெழுத்து தம்பி. நெற்றிவேர்வை சொட்ட சொட்ட நாங்க பாடுபடுறோம். அந்த நெற்றி வேர்வையால கூட எங்க தலையெழுத்த அழிக்க முடியாது. காட்டு மிருகங்கள விரட்டியடிக்கிற சக்தி உள்ளவங்க நாங்க.*



*புதிய பூமி – முத்தையா, எம்.ஜி.ஆர்.*

*ஆனா கண்ணுக்கு தெரியாம வந்து சாகடிக்கிற கடும் நோய்களை விரட்டியடிக்கிற சக்தி எங்ககிட்ட இல்ல தம்பி. அது மட்டும் இருந்தால் எங்க கிராமமே புது வாழ்வு பெற்று புதியபூமியாயிடும்.*

*இதைக்கேட்டதும் இனி தான் மருத்துவ பணி செய்ய வேண்டிய இடம் அந்த கிராமம்தான் என்று முடிவுசெய்து கிராமத்திற்குப் போய்விடுவார். சென்னையில் மருத்துவருக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றாலும் கூட பணத்தை முக்கியமாகக் கருதாமல் எம்.ஜி.ஆர். கிராமத்துக்குச் சென்று மக்களுக்கான சேவையே முக்கியம் என்று கருதி சிறப்பாகச் செயல்படுவார்.*

*புதிய பூமி படத்தில் எம்.ஜி.ஆர். மருத்துவ சிகிச்சை செய்ய வந்திருக்கும் சிறிய கிராமத்தில் அவருக்கு ஒரு வீட்டை மருத்துவமனை நடத்திக்கொள்ளும்படி கொடுப்பார். வேண்டிய வசதிகளை கதாநாயகி ஜெயலலிதாவும் அவருடைய சித்தப்பாவும் செய்து தருவர். அப்போது அங்கு ஒரு தாய்க்கு விஷக்காய்ச்சல் ஏற்பட்டு மந்திரவாதியின் சிகிச்சை பலிக்காமல் மருத்துவ மனைக்குக் கொண்டு வந்திருப்பார்கள். எம்.ஜி.ஆர். ஊசி போட்டு சிகிச்சையிளிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருப்பார். மந்திரவாதி ஊர் மக்களிடம் இந்த மருத்துவ சிகிச்சையால் அந்தப் பெண் இறந்து போவாளே தவிர உயிர் பிழைக்க மாட்டாள் என்று அச்சுறுத்தி மிரட்டிக் கொண்டு இருப்பார்.*

***பூசாரி :*** *அய்யய்யோ அய்யய்யோ மாரியாத்தாக்கு அலகு குத்திக்கிற இந்த உடம்புல இந்த மகாபாவி ஊசிய குத்துரான்ய்யா. அய்யோ மகமாயி ஒரு உயிர*

*ஊசிய போட்டுக்குத்தி அநியாயமா கொல பண்ணப்பாக்குறானே இந்த பட்டனத்து டாக்டரு. இதோ பாருங்கய்யா இனி இந்த ஆளு ஊருல இருந்தா இந்த ஊரையே சுடுகாடாக்கிருவான் வாங்கய்யா அந்த ஆள ஊரவிட்டே துரத்தலாம், வாங்கய்யா வாங்க. [அந்நேரம் ஒரு சிறுவன் எம்.ஜி.ஆரின் மருத்துவ மனையில் இருந்து வெளியே வருவான்]*

***பூசாரி;*** *பார்த்திங்களாயா அந்த அம்மாவை கொன்னுட்டு இந்தப் புள்ளய அநாதையா ஆக்கிட்டான்யா. நான் அப்பவே சொல்லல, மகமாயி தயவில்லாம உடம்பு சொகமாகி போயிடுமா. . .?*

**சிறுவன் :** *இல்ல பூசாரி அய்யா எங்கம்மா பொளச்சுக்கிட்டாங்க.*

***பூசாரி :*** *என்ன உங்கம்மா பொளச்சுக்கிட்டாளா?*

**சிறுவன் :** *ஆமா நீயுந்தான் பத்துநாளா மந்திரம் ஜெபிச்ச, மருந்து கொடுத்த இப்ப பாருங்கய்யா*



*புதிய பூமி – பூசாரி, கிராம மக்கள்*

*எங்கம்மா ஒரே ஊசியில பொளச்சுக்கிட்டாங்க.*

***ஊர் மக்கள் :*** *என்னய்யா சொல்றான் இவன்.*

***பூசாரி :*** *அட போய்யா பொடிப்பைய பொய் சொல்றான். நீங்க வேற.*

***சிறுவன் :*** *சத்தியமா சொல்றேன். பொய் சொல்லல.*

***ஊர் மக்கள் :*** *பாத்தியாய்யா வயித்தில அடிச்சி சத்தியம் பண்றான்.*

*[ஊர் மக்கள் உள்ளே வந்து நோயாளியைப் பார்த்தல்.]*

***நோயாளி :*** *டாக்டரய்யா நீங்க நல்லாயிருக்கனும்.*

*ஊர்மக்கள் எம்.ஜி.ஆரைப் பாராட்டி அவருக்கு தங்களுடைய முழு ஆதரவையும் அளித்தார்கள். மந்திரவாதியின் செயலால் அதுவரை பயந்திருந்த மக்கள் அப்போது முதல்முறையாக பய உணர்வு நீங்கியிருப்பர்.*

***முன்மாதிரி மருத்துவர் எம்.ஜி.ஆர்.***

*ஒரு மருத்துவனின் கடமை என்பது மருத்துவராக இருந்து கொண்டு தனக்கு வருமானம் வரக்கூடிய அனைத்து வழிகளையும் திறந்து வைத்துக் கொண்டு வரும் நோயாளிகளுக்கு குறைவான சிகிச்சைகளை அளித்து அதிக அளவு வருமானம் பெறுவது அல்ல. மாறாக தன்னுடைய வசதிகளை குறைத்துக் கொண்டு மருத்துவ வசதி அதிக அளவில் தேவைப்படும் கிராமங்கள், குக்கிராமங்கள், மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர்கள் என அதிகளவு*

பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை வழங்குவதே மருத்துவர் தர்மத்தின்படி சிறப்பு. இவ்வகையில் எம்.ஜி.ஆர். மருத்துவராக நடித்த படங்களில் மருத்துவத் தொழில் தர்மத்தை தீவிரமாக பின்பற்றும் மிகச்சிறந்த முன்னுதாரணமாக விளங்கியுள்ளார்.

புதிய பூமி படத்தில் ஒருவருக்கு அவசரமாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையில் அங்கு ஒரு சின்ன சிம்னி விளக்கு மட்டுமே உண்டு. அச் சிறிய விளக்கின் வெளிச்சத்தை கொண்டு தான் அறுவை சிகிச்சியைச் செய்ய வேண்டும் எம்.ஜி.ஆர். அறுவை சிகிச்சை செய்வதற்கு தயாராகும்படி கூறுவார். அவருக்கு உதவியாளராக இருந்த ஜெயலலிதா சிகிச்சைக்கான பணிகளில் அவசர அவசரமாக ஈடுபடுவார்.

எம்.ஜி.ஆரின் முறைப்பெண் ஷீலா கிராமத்து மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்கு ஒரு மருத்துவராக உடனிருந்து உதவாமல் தன்னுடைய நெக்லஸ் ஜெயலலிதாவின் கழுத்தில் கிடந்ததால் அதை ஜெயலலிதா தன்னிடமிருந்து திருடி இருப்பார் என்று சந்தேகப்பட்டு ஜெயலலிதாவுடன் சண்டையிடுவார்.

ஷீலா மருத்துவ சிகிச்சைக்கான உதவிகளை ஜெயலலிதாவும் செய்ய விடாமல் தடுத்து அந்த நெக்லஸைப் பறிக்கும் முயற்சியில் இருப்பார். அப்போது ஷீலாவும் ஒரு மருத்துவர் என்பதால் எம்.ஜி.ஆர். ஷீலாவை பார்த்து விரைவாக எனக்கு உதவி செய்வதற்கான ஏற்பாடுகளை செய் என்று கூறும் போது ‘முடியாது’ என்று ஷீலா மறுத்துவிடுவார். அவள் கிடக்கிறாள் நான்

உதவுகிறேன் என்று சொல்லும் ஜெயலலிதா எம்.ஜி.ஆருக்கு தன்னாலான உதவிகளைச் செய்வார்.

ஜெயலலிதா சிறிய விளக்கிலிருந்து வந்து கொண்டிருக்கும் சுடரின் குறைந்த வெளிச்சத்தில் அறுவை சிகிச்சை எம்.ஜி.ஆர். செய்து முடிக்கும் வரை விளக்கு அணைந்துவிடாமல் இரு கரங்களையும் சுடருக்கு பாதுகாப்பாக வைத்தபடி இருப்பார். உதவியாக நிற்பார்.

அறுவை சிகிச்சை முடிந்து கட்டுப்போட்டு முடிந்ததும் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் உள்ளங்கைகளைப் பார்க்கும்போது அவரது உள்ளங்கை வெந்து போயிருக்கும், தன்னுடைய மருத்துவ சேவைக்காக தன் சுக துக்கங்களை பாராமல் தன்னோடு இருந்து இணைந்து செயல்படும் ஜெயலலிதாவை நினைத்து எம்.ஜி.ஆர். மகிழ்ச்சி அடைந்து நன்றி கூறுவார். அதே நேரத்தில் மருத்துவத்துறையில் தன்னை அர்ப்பணித்துக்



புதிய பூமி – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்., ஷீலா

கொண்ட ஷீலா உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை வழங்க முன்வராமல் தன்னுடைய நெக்லஸ் மீது அதிக அக்கறை கொண்டு சண்டை போட்டதை நினைத்து ‘நீ மருத்துவ இனத்துக்கே ஒரு அவமானம்’ என்று கூறிவிடுவார் ஆக இந்தப் படத்தில் இக்காட்சியில் சிறந்த மருத்துவர், மோசமான மருத்துவர் பாகுபாடு தெளிவாகக் காட்டப்படுகிறது.

தன்னலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு தன்னுடைய பணம், பொருள் என்று இருக்கும் ஷீலா போன்றோர் மருத்துவ தொழில் தர்மத்தைப் பின்பற்றுவதில்லை. ஒருவர் சிறந்த மருத்துவராக இருக்க தன்னுடைய சுக துக்கங்களை புறந்தள்ளிவிட்டு நோயாளி பூரண குணமடைய வேண்டும் என்ற கருத்துடன் செயல்பட வேண்டும் . இவ்வாறு மருத்துவத்துறையில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? மருத்துவத்துறையில் இல்லாத ஜெயலலிதா போன்றோரும் மருத்துவத்துறைக்குப் பூரணமாக உதவுகின்ற எண்ணத்தில் மருத்துவத்



புதிய பூமி – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்.

தொழிலில் ஈடுபட முடியும் என்பதும் எடுத்துக்காட்டப்படும்.

**மருத்துவரின் கடமை**

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம்.ஜி.ஆர். மருத்துவராக அறிமுகமாகி தன்னுடைய பணியை தொடர்வார். தன்னுடைய மக்கள் கூட்டத்தின் தலைவராக இருந்து அவர்களின் விடுதலைக்காக பாடுபட்டு அவர்களை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து சொந்த நாடு கொண்டு வந்து சேர்ப்பார். இப்படம் கேப்டன் பிளாக் என்ற படத்தின் தழுவலாக எடுக்கப்பட்ட படமாகும்.

படத்தின் முதல் காட்சியில் எம்.ஜி.ஆர். வெற்றி வெற்றி என்று கூறி மகிழ்வார். கொடிய விஷமுள்ள பாம்பு தீண்டினால் அதற்குரிய மாற்று மருந்து தயாரிக்க தேவையான மூலிகையை கண்டுபிடித்து வெற்றி கண்டிருப்பதையும் அதற்கு அவர்பட்ட சிரமத்தையும் நாகேஷிடம் எடுத்துக் கூறுவார்.

எம்.ஜி.ஆரும் நாகேஷும் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் நாட்டின் சர்வாதிகாரியால், கலகக்காரர்கள் என்று அழைக்கப்படும் விடுதலைப் போராளிகள் மோதலில் காயம்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்காக எம்.ஜி.ஆரிடம் அழைத்து வருவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். இவருக்கு எப்படி இந்த காயம் ஏற்பட்டது என்று கேட்பார், அவர்கள் பதில் சொல்லத் தயங்குவர் உண்மையை அறிந்து கொண்டு அவர்களுக்கு சிகிச்சை அளிப்பார். அப்போது ஒரு மருத்துவரின் பண்பு பற்றிய வரைவிலக்கணம் ஒன்றை எம்.ஜி.ஆர்.

எடுத்துரைப்பார். யாருடைய தாகமானாலும் அதை தீர்த்து வைப்பதுதான் தண்ணீரின் தன்மை அதுபோல நோயாளி யாராக இருந்தாலும் அவருடைய நோய்க்கு சிகிச்சை அளிப்பது ஒரு மருத்துவரின் இயல்பு' என்று மருத்துவத்திற்கான இலக்கணத்தை எடுத்துரைப்பார். அக்காட்சி வருமாறு

**போராளிகள்** : மருத்துவர் ஐயா இவருக்கு மரணக்காயம் ஏற்பட்டிருக்கு. எப்படியாவது காப்பாத்திருங்க

**நாகேஷ் :** அண்ணே, முதல்ல என்னை காப்பாத்துங்க, வந்த வேகத்துல இடிச்சி தள்ளி ஏழு எட்டு எலும்ப காணோம்.

**எம்.ஜி.ஆர். :** போய் மூலிகை இலை கொண்டுவா. ஆமா இவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது. [பதிலகிக்க தயங்குவர்] இவருடைய உயிரையே என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள் பிறகு யோசிக்க என்ன இருக்கிறது. மருத்துவரிடம் உண்மையை மறைப்பது மரணத்தை மேளம் முழக்கி வரவேற்பதாகும், சொல்லுங்கள்.



ஆயிரத்தில் ஒருவன் – எம்.ஜி.ஆர்., போராளிகள்

***போராளிகள் :*** *உங்களை நம்புறோம், பேச்சிலே விஷத்தையும், பார்வையிலே விஷமத்தையும் கொண்ட சர்வாதிகாரியை எதிர்த்து போராடினோம் அவர்களுடைய காவலர்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட கை கலப்புலதான் இந்த காயம் ஏற்பட்டது.*

***நாகேஷ் :*** *அய்யய்யோ அந்த ஆள் பேரைக் கேட்டால் எனக்கே பயமாயிருக்குது, பெரண்டையும் கத்தாழையும் மாதிரி இருக்குற நீங்க போய் அவன் கிட்ட மோதலாமா? பாளம் பாளமா உடம்பை கிழிச்சிவிட்டுருக்கானே.*

***எம்.ஜி.ஆர்.:*** *அப்படியானால் நீங்கள் எல்லாம் கலகக்காரர்களா?*

***போராளி :*** *ஆமாம் சர்வாதிகாரியின் அகராதிப்படி, தயவுசெய்து நீங்களும் அப்படி சொல்லாதீங்க இவரைக் காப்பாத்துங்க*

***எம்.ஜி.ஆர். :*** *ஓஹோ . . .*

***போராளி :*** *ஏன் நிறுத்திட்டீங்க கலகக்காரங்களுக்கு வைத்தியம் செய்யுறோமேனு யோசிக்கிறீங்களா?*


***நாகேஷ் :*** *பின்ன தோள்ல தூக்கிவச்சு கொஞ்ச சொல்றீங்களா?*

***போராளி :*** *மருத்துவர் ஐயா யோசன பண்ணாதீங்க, தயவு செய்து காப்பாத்துங்க.*

***எம்.ஜி.ஆர். :*** *பயப்படாதீங்க, யாருடைய தாகமானாலும் அதை தீர்த்து வைப்பதுதான் தண்ணீரின் தன்மை மருத்துவரும் அப்படித்தான் நண்பர்களே.*

படத்தின் நடுவே தங்களை விலை கொடுத்து வாங்கிய தீவுக்கு வந்தவுடன் அங்கிருந்த ஒருவருக்கு விஷப் பாம்பு கடித்திருப்பதை அறிந்து அவரை தனது விரோதியெனக் கருதாமல் எம்.ஜி.ஆர். காப்பாற்றுவார். புதிய பூமி படத்திலும் வில்லன் நம்பியாருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து காப்பாற்றுவார். ஆயிரத்தில் ஒருவனில் கடைசி காட்சியில் நம்பியார் சர்வாதிகாரி மனோகர் மீது விஷம் தோய்ந்த கத்தியை எறிந்ததும், முதுகில் கத்தி எறிந்தாயே நீயெல்லாம் ஒரு ஆண்மகனா என்று கேட்டுவிட்டு ஜெயலிதாவை தனது மருந்துப் பெட்டியைக் கொண்டு வரச் செய்து விஷத்தை முறிப்பார். நம்பியார் ஜெயலலிதாவை சகோதரி என்று அழைத்து மருந்து பெட்டியை கொண்டு வந்து தராதே என்று தடுக்க முயவார். ஆனால் ஜெயலலிதா இந்தப் படத்திலும் இக்காட்சியில் எம்.ஜி.ஆருக்கு மருத்துவ சேவையில் உதவும் நல்ல உள்ளம் கொண்ட கதாபாத்திரத்தில் நடித்திருப்பார்.

''காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து''



ஆயிரத்தில் ஒருவன் – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்., மனோகர் (படுத்திருப்பது), நம்பியார்

என்று அவ்வையார் பாராட்டும் பெண்ணினத்தின் அடையாளமான கதாபாத்திரம் ஜெயலலிதாவுக்கு புதிய பூமியிலும் ஆயிரத்தில் ஒருவனிலும் கிடைத்தது. எம்.ஜி.ஆர். தன்னுடைய கதாபாத்திரம் உருவாக்கப்படும் போதே தனக்கு நிகரான நல்ல பண்புகளைக் கொண்ட பெண்ணாகக் கதாநாயகி கதாபாத்திரத்தையும் உருவாக்கும்படி செய்வார். படத்தில் இருவருமே இலட்சியத் தம்பதியராகக் வடிவமைக்கப்படுவர். 'பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே' என்று பாரதியார் பாடியதைப் போன்று எம்.ஜி.ஆர். மருத்துவ சேவையில் பகைவனுக்கும் உரிய முறையான சேவையை வழங்கத் தயங்கியதில்லை. இதுவும் மருத்துவ தொழில் தர்மம் ஆகும். இரசிகர்கள் மனதிலும் இது போன்ற சிறந்த கதாபாத்திரப்பண்புகள் அவரைப் பற்றிய உயர்வான எண்ணத்தை உருவாக்கின.

மருத்துவராக எம்.ஜி.ஆர். நடித்திருக்கும் படங்களில் எல்லாம் மருத்துவருக்குரிய பண்பு நலன்களைப் பெற்றுப் படம் பார்ப்பவர் நாமும் மருத்துவத் தொழிலில் ஈடுபடவேண்டும்; மக்களுக்கு நிறைவான மருத்துவ சேவை செய்ய வேண்டும் என்று ஆசைப்படும் வகையில் தன்னுடைய கதாபாத்திரத்தை மிகச் சிறப்பான பண்புடைய முன்மாதிரி மருத்துவராக உருவாக்கி நடித்திருப்பார்.

**நிறைவு**

எம்.ஜி.ஆர். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரம் எதுவாக இருந்தாலும் காட்சியாலும், உடல் மொழியாலும், நடிப்பாலும், துணை கதாபாத்திரங்களும் மேக்கப் உடை 'செட்' போன்ற

அனைத்து அம்சங்களின் உதவியாலும் சிறப்பாக முன்மாதிரி கதாபாத்திரமாக உருவாக்கி இருப்பார். அவர் அணியும் உடை, பெல்ட், தலைமுடி, அவர் அணியும் ஷு, டை[tie], கருப்பு கண்ணாடி போன்றவையும் மிகுந்த கவனத்துடன் தெரிவு செய்யப்பட்டிருக்கும்.

புதிய பூமி படத்தில் அவருடைய பெற்றோர் குறிப்பாக அவருடைய தாயார் எங்கேயோ தன்மகன் மருத்துவ சேவை செய்யப்போகிறான், அங்கு கொள்ளையர் அதிகமிருக்கிறார்கள் என்பதை அறிந்து அனுமதியளிக்க மறுக்கவே, அவ்வேளையில் தான் ஒரு கருணையே உருவான அன்னையின் மகன் மற்றும் ஒரு வீரனின் மகன் தந்தையார் காவல்துறை உயரதிகாரி என்பதை எடுத்துக்கூறி தன் தாயாரிடம் அனுமதி பெற்று சென்று விடுவார். இவ்வாறு தன்னுடைய தொழிலை நேர்மையாக செய்யவேண்டிய அவருக்கு எதிர்ப்பும் மறுப்பும் வரும்போது அவற்றை சமாளித்து முன்னோக்கி நடை போடுவார்.

மருத்துவ சேவையிலும் எதிர்ப்புகளைச் சமாளிப்பதிலும் பகைவர்களை அடக்கி தன்னை அவர்களின் தாக்குதலிலில் இருந்து தற்காத்துக் கொள்வதிலும் தான் கொண்ட கொள்கையில் உறுதியாய் நிற்பதிலும் எம்.ஜி.ஆர். தனது கதாபாத்திரத்தை மிகுந்த கவனத்துடன் இயக்குனர் கதாசிரியர், உடை அலங்கார நிபுனர், ஒப்பனையாளர் ஆகியவர்களின் துணையுடன் சிறப்பாக உருவாக்கியதால் இன்றும் அவரரை மக்கள் மறக்காமல் இருக்கின்றனர்.

## திருக்குறள் - அதிகாரம் : மருந்து

**விளக்க உரை - டாக்டர். மு.வரதராசன்**

***குறள் 941:***

*மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று.*

***விளக்கம்:***

*மருத்துவ நூலோர் வாதம் பித்தம் சிலேத்துமம் என எண்ணிய மூன்று அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.*

***குறள் 942:***

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.*

***விளக்கம்:***

*முன் உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றியப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.*

***குறள் 943:***

*அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.*

***விளக்கம்:***

*முன் உண்ட உணவு செரித்துவிட்டால், பின் வேண்டிய அளவு அறிந்து உண்ணவேண்டும், அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும்.*

***குறள் 944:***

*அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து.*

**விளக்கம்:**

*முன் உண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைபிடித்து அவற்றையும் பசித்த பிறகு உண்ண வேண்டும்.*

***குறள் 945:***

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு.*

**விளக்கம்:**

*மாறுபாடில்லாதா உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு உண்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் இல்லை.*

***குறள் 946:***

*இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்*
*கழிபேர் இரையான்கண் நோய்.*

**விளக்கம்:**

*குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலைநிற்பது போல, மிகப்பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்க்கும்.*

***குறள் 947:***

*தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றிப் படும்.*

**விளக்கம்:**

*பசித்தீயின் அளவின் படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்ப்பட்டு விடும்.*

***குறள் 948:***

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

***விளக்கம்:***

*நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்கு பொருந்தும் படியாகச் செய்யவேண்டும்.*

***குறள் 949:***

*உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்.*

***விளக்கம்:***


*மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.*

***குறள் 950:***

*உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*
*அப்பால் நாற்கூற்றே மருந்து.*

***விளக்கம்:***

*நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அங்கிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்குவகைப் பாகுபாடு உடையது.*



# 3. பொறியாளராக எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படித்தவராக டாக்டர், வக்கீல், இன்ஜினியர் என்று அதிக அளவில் படங்களில் நடிக்கவில்லை என்று சொல்லப்படுவதுண்டு. எம்.ஜி.ஆர். படித்தவராக நடித்திருக்கும் படங்களில் மிகச்சிறப்பாக ஒரு நல்ல முன்னுதாரணமான கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்.

## பொறியாளராக நடித்த கொடுத்துவைத்தவள்

கொடுத்து வைத்தவள் (1963) படம் ஈ வி சரோஜாவின் சொந்தப் படமாகும். அவர் கணவர் ராமண்ணா இயக்கி தயாரித்தார். ஈ வி சரோஜாவுக்கு இதுவே கடைசி படம். இவரது முதல் படம் என் தங்கை (1953). இப்படத்தில் 12, 13 வயது சிறுமியாக எம்.ஜி.ஆரின் தங்கையாக நடித்திருந்தார். சோகம் ததும்பும் இப்படத்தில் இவர் பட்டினியால் இறந்து போவார். இவருக்கு வாங்கி வந்த இரண்டு இட்லியை வழியில் ஒரு பிச்சைக்காரன் 'ஐயா பசிக்குதே' என்று கேட்டதால் எம்.ஜி.ஆர். அவர் கையில் கொடுத்து விடுவார். மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்த இப்படம் அண்ணன் தங்கை பாசத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்த

படமாகும். இதன் பின்னர் ஈ.வி சரோஜா பல படங்களில் கதாநாயகியாக நடித்தார். பின்னர் டி ஆர் ராமண்ணாவை திருமணம் செய்து கொண்டார். கடைசியில் ‘கொடுத்து வைத்தவள்’ படத்தில் எம்.ஜி.ஆரின் ஜோடியாக நடித்ததோடு தன்னுடைய திரையுலக அனுபவங்களை நிறைவு செய்து கொண்டார்.

கொடுத்து வைத்தவள் படத்தில் எம்.ஜி.ஆர். பாலம் கட்டும் பொறியாளராக நடித்திருப்பார் பாலம் கட்டும் பணிகளுக்கு வேண்டிய கட்டுமானப் பொருட்களை வழங்கும் எம் ஆர் ராதா தரம் குறைந்த பொருட்களைப் பெற்று அதற்குப் பொறியாளரின் கையொப்பம் வேண்டும் என வலியுறுத்துவார். ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக விளங்கப் போகும் பாலம் தரம் குறைந்த பொருட்களால் கட்டப்பட்டு உடைந்து போனால் அம்மக்களின் வாழ்வும் வளமும் கருகிப்



கொடுத்துவைத்தவள் –எம்.ஜி.ஆர்., ஈ.வி.சரோஜா

போய்விடும் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர். தான் கையொப்பமிட மறுத்துவிடுவார். இதனால் எம் ஆர் ராதா அடியாட்களைக் கொண்டு எம்.ஜி.ஆர். ரயிலில் போகும்போது அவரைக் கொல்ல முயற்சி செய்வார். அவர்களுடன் சண்டை போட்டு தப்பிக்கும் முயற்சியில் எம்.ஜி.ஆர். இரயிலிலிருந்து கீழே விழுந்ததில் தலையில் அடிபட்டு புத்தி பேதலித்து விடும். அப்போது ஒரு முரடனிடம் தாலி கட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்த ஈ.வி. சரோஜாவுக்கு அவரது சின்னம்மா பைத்தியமாக அங்கு வந்து சேர்ந்த எம்.ஜி.ஆரைத் தாலிகட்டி வைத்துவிடுவார். ஈ.வி.சரோஜா எம்.ஜி.ஆர். யார் எவர் என்று அறியாமலேயே பைத்தியமாக இருக்கும் அவருடன் அவ்வூரை விட்டுக் கிளம்பி விடுவார்.

இப்படத்தில் பொறியாளராக வரும் எம்.ஜி.ஆரும் கட்டட ஒப்பந்ததாரராக வரும் எம் ஆர் ராதாவும் பேசும் காட்சிகள் ஒரு மிகச்சிறந்த பொறியாளரின் கடமை பற்றி பார்ப்போருக்குத்



கொடுத்துவைத்தவள் –எம்.ஜி.ஆர்., ஈ.வி.சரோஜா

தெளிவாக உணர்த்தும். இருவருக்கும் இடையே நடக்கும் உரையாடல் இதோ:

**எம்.ஆர். ராதா :** ஆமா நீ அதுல சொட்ட, இதுல சொட்டனு அரசாங்கத்துக்கு எழுதுவேன்றியாமே என்ன அது.

**எம்.ஜி.ஆர். :** ஒரு இன்ஜினியரோட கடமையை உணராம பேசுறீங்க நீங்க. ஆயிரக்கணக்கான மக்களுக்கு காலமெல்லாம் பயன்படக்கூடிய ஒரு அணையை தகுதியில்லாத பொருட்களைக் கொண்டு கட்ட சொல்றீங்களே? இந்த அக்கிரமத்தை எப்படி அனுமதிக்க முடியும்?

**எம்.ஆர்.ராதா :** அப்போ நல்ல சாமான்களைப் போட்டு கட்டுனால் எனக்கு நஷ்டமில்ல வரும்.

**எம்.ஜி.ஆர். :** இல்ல இல்ல எஸ்மேட் படி கட்டுனாலே உங்களுக்கு பெருத்த லாபம்



கொடுத்துவைத்தவள் –எம்.ஜி.ஆர்., எம்.ஆர்.ராதா

கிடைக்கும். அத விட்டுட்டு அரசாங்கத்த ஏமாத்தி கொள்ளை லாபம் அடிக்கலாங்குற ஆசையில . . .

**எம்.ஆர்.ராதா :** நிறுத்து, நீ உன் முதலாளிக்கு துரோகம் நினைக்கிற

**எம்.ஜி.ஆர். :** பொதுமக்களின் நன்மைக்காக ஒரு தனி மனிதனுக்கு துரோகம் செய்யத்தான் வேணும்னா அதுக்கு நான் தயங்க மாட்டேன். எனக்கு பொதுநலம்தான் முக்கியம்.

**எம்.ஆர்.ராதா :** இந்த பொதுநலம், தியாகம், பரோபகாரம் இந்த வார்த்தையெல்லாம் ஒரு ஃபேஷனா போயிருச்சு இப்போ. பொதுநலங்குறது ஒரு போலித்தனமான வாதம் அத நம்பி கெட்டுப் போகாதே.

**எம்.ஜி.ஆர். :** அந்த கவலை உங்களுக்கு வேண்டியதில்லை. மரணத்தருவாயிலே நான் என்



கொடுத்துவைத்தவள் – எம்.ஜி.ஆர்.

கடந்த கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும் போது இது வரையிலும் நான் யாருக்கும் தீங்கே செய்யல, நன்மையத்தான் செய்தேன் என்ற நிம்மதியோட நான் சாக விரும்புறேன்.

**எம்.ஆர்.ராதா :** போனாப்போகுதுனு உனக்கு வேலை கொடுத்தேன், கொஞ்சம் கூட விசுவாசம் இல்லாம பேசுற.

**எம்.ஜி.ஆர். :** அந்த விசுவாசம் இருக்குறனாலதான் உங்க பேரை காப்பாத்தனும்னு நான் ஆசைப்படுறேன். நாளைக்கு அணைக்கட்டு உடைஞ்சு ஆயிரமாயிரம் குடிசைகள் தண்ணியில மூழ்கி அந்த கொடுமைக்கு பலியான ஏழை எளியவுங்களெல்லாம் உங்களுக்கு சாபம் கொடுக்கக் கூடாதேங்குற நல்ல எண்ணத்துலதான் சொல்றேன்.

**எம்.ஆர்.ராதா :** அட போய்யா உன் நல்லெண்ணம். கடைசியா சொல்றேன் என்னை விரோதிச்சிக்காத . .

**எம்.ஜி.ஆர். :** உங்களப்போல பெரிய மனிதர்களின் விரோதத்தைவிட ஏழைகளின் கண்ணீருக்குத்தான் நான் பயப்படுவேன்.

மதுரையில் சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து ஏறத்தாழ ஐம்பது மாணவர்கள் இறந்தனர். அது மிகப் பழைய கட்டிடம். புதுப்பித்து பராமரிக்கப்படவில்லை. நம் நாடு படத்தில் தரமில்லாத கட்டுமானச் சாமான்களை பயன்படுத்தி கட்டிய கட்டிடம் இடிந்து விழுந்து பள்ளி மாணவர்கள் இறந்து போனதை பற்றி மூன்று வில்லன்களில் ஒருவரான அசோகன் பெருமையுடன் தன் திறமையை வியந்து போற்றி எடுத்துச் சொல்வார். தரம் குறைந்த பொருட்களைக் கொண்டு



நம்நாடு – எம்.ஜி.ஆர்., தங்கவேலு, அசோகன்


கட்டப்படும் பள்ளிக்கூடம், கட்டிடங்கள் இடிந்து விழுந்து உள்ளே இருந்த மாணவர்கள் இறந்து போகின்றனர்.

1971 ஆம் ஆண்டில் திண்டுக்கல், வேடசந்தூர் அருகே அழகாபுரி என்ற ஊரில் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது தரமற்ற பொருட்களைக் கொண்டு கட்டப்பட்ட ஓர் அணை இரண்டே ஆண்டுகளில் 1973ல் இடிந்து பல கிராமங்கள் தண்ணிரில் மூழ்கிப் போயின. இவ்வணை மீண்டும் மீண்டும் சரி செய்யப்பட்டும் அஸ்திவாரம் உறுதியாக இல்லை என்பதால் அடுத்தடுத்து ஐந்து முறை உடைந்து விட்டது. இவ்வணை நீர் 7330 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கின்றது. இதன் ஷட்டர்கள் உடைந்து தண்ணீரில் பல மைல் தூரம் இழுத்துச் செல்லப்படுவது வாடிக்கையாகி விட்டது.

அணை உடைந்து போதல், பாசனத்தண்ணீர் வீணாகுதல் போன்ற விளைவுகள் நேரிடக் கூடாது

என்பதற்காக எம்.ஜி.ஆர். தனது படங்களில் தத்தம் தொழில் தர்மத்தை பின்பற்றாமல் தவறான வழியில் நடப்பவர்களையும் முறைகேடான செயல்களைச் செய்பவர்களையும் வில்லனாகக் காட்டி அவர்களைத் திருத்துவார். அவர்கள் திருந்த வேண்டும் என்பது தான் அவரது கொள்கை.

கெட்டவர்கள் மனம் திருந்துதல் என்பது அன்பும் பண்பும் கொண்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருணை குணம் ஆகும். எனவே மக்களும் எம்.ஜி.ஆர். பழி வாங்கும் உணர்ச்சியின்றி பகைவனைத் திருத்தும் பண்பை வெகுவாக ரசித்தனர்; அவரை மதித்துப் போற்றினர்.



இயக்குனர் ப.நீலகண்டனுடன் எம்.ஜி.ஆர்.

# 4. வழக்கறிஞராக எம்.ஜி.ஆர்.

*எம்.ஜி.ஆர். சமூக நீதியை வலியுறுத்தும் வகையில் தன் படங்களின் கதாபாத்திரங்களை அமைத்தார். மொழி, இன, பேதமின்றி மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் நீதிக்கு பின் பாசம் (1963), மாட்டுக்காரவேலன் (1970), கலங்கரை விளக்கம் (1965) ஆகிய படங்களில் வக்கீலாக நடித்தார். நீதிக்குத் தலைவணங்கு (1976) என்ற படத்தில் தான் அறியாமல் செய்த ஒரு தவறுக்காக தானே முன்வந்து நீதியின் முன்பு தன்னை ஒப்படைக்கும் நியாயமான மனிதராக நடித்திருந்தார்.*

*நீதி என்பது ஒரு சாராருக்கு மட்டுமே உரியதாக குறிப்பாக பணக்காரராக இருக்கும் ஆதிக்க சாதியினருக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் மட்டுமே ஆதரவானதாக இருக்கக்கூடாது. ஏழைகளுக்கும், இல்லாதவர்க்கும் ஒடுக்கப் பட்டவருக்கும், அபலைக்கும் சம நீதி கிடைக்க வேண்டும் என்ற கொள்கையில் எம்.ஜி.ஆர். உறுதியோடு இருந்தார்.*

*நீதிக்குப் பின் பாசம் படத்தில் எம்.ஜி.ஆரின் தந்தை காவல்துறையில் உயர் அதிகாரி. அவரது அண்ணன் அரசு வக்கீல், எம்.ஜி.ஆர். ஒரு வக்கீல்.*



நீதிக்கு பின் பாசம் – எம்.ஜி.ஆர்., கண்ணாம்பாள்

குற்றம் சுமத்தப்பட்ட எம்.ஜி.ஆரின் தாயார் பேறுகால மருத்துவர். கைது செய்தவர் எம்.ஜி.ஆரின் தந்தை அவர் குற்றம் செய்தார் என்று நிரூபிக்க வேண்டியவர் அரசு வக்கீல். அவர் குற்றம் செய்யவில்லை என்று நிரூபித்து காப்பாற்ற வேண்டியவர் எம்.ஜி.ஆர். இம்மூவருக்கு இடையில் நடக்கும் போராட்டமே இப்படத்தின் மையக் கருத்தாகும். நீதியை நிலை நாட்ட வேண்டும் என்பதில் இக்குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே கருத்தாகச் செயல்படுவர். இப்படம் நீதிக்குப் பின் பாசம் என்ற உயர்ந்த கருத்தை நிறுவும் படமாக படம் பார்ப்பவருக்கு ஒரு பாடமாக அமைந்தது.

வக்கீல் என்பவர் வழக்கு கிடைக்கிறது; தனக்கு வருமானம் வரும் என்பதற்காக இருவருக்கிடையே இருக்கும் பகைமையை மேலும் அதிகமாக்கி பின்னர் அந்தப் பகை நெருப்பில் தான் குளிர்காய

கூடாது என்ற உயர்ந்த கருத்தை எடுத்துக் காட்டுவதற்காக படத்தில் அதன் கதைக்கு தொடர்பில்லாத ஒரு காட்சி இணைக்கப்பட்டது. அக்காள் தங்கையை மணந்த அண்ணன் தம்பி இருவர் தமது வயலுக்கு இடையில் இருக்கும் வரப்பு ஒரு அடி தள்ளி அமைந்து விட்டதனால் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு நடத்தி அந்த ஒரு அடி இடத்தைப் பெறவேண்டும் என்பதற்காக வக்கீலாக இருக்கும் எம்.ஜி.ஆரிடம் வந்து போட்டிபோட்டுக்கொண்டு *1000 2000 5000* என்று வக்கீல் கட்டணம் கொடுக்க முன்வருவார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் இருவரிடமும் அந்த வரப்பின் மதிப்பு எவ்வளவு என்று கேட்டு அதைவிட பல மடங்கு வழக்குச் செலவு செய்ய நினைப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களின் அறியாமையை உணர்த்தி இருவரையும் சமாதானமாக்கி அனுப்பிவைப்பார்.

வழக்குக் கொண்டு வந்த இருவரும் தங்கள் மனைவியரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு



நீதிக்குப்பின் பாசம் – எம்.ஜி.ஆர். அண்ணன், தம்பி வழக்கை தீர்த்து வைத்தல்

இவ்வாறு நீதிமன்றத்தில் ஒருவர் மீது ஒருவர் வழக்குத் தொடுக்க வக்கீலைத் தேடி வந்து இருப்பார்கள். இக்காட்சி எம்.ஜி.ஆர். நீதிக்காக மட்டு வழக்கு நடத்துவாரே தவிர வருமானத்துக்கு ஆசைப்பட்டு, என்றும் வழக்கு நடத்த மாட்டார் என்ற அவருடைய தொழில் தர்மத்தைப் படம் பார்ப்போருக்கு எடுத்துக்காட்டுகிறது.

**தொழில் தர்மமும் தர்ம சங்கடமும்**

தொழில் தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் தர்ம சங்கடத்தை நீதிக்குப் பின் பாசம் காட்டுகிறது. எம்.ஆர்.ராதாவைக் கொலை செய்தது, எம்.ஜி.ஆரின் தாயார் கண்ணாம்பா என்று எம்.ஜி.ஆரின் தந்தை காவல்துறை அதிகாரி தன் தொழில் தர்மப்படி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தார். அரசு வழக்கறிஞரான அசோகன் [எம்.ஜி.ஆரின் அண்ணன்] காவல்துறைக்கு ஆதரவாகக் கொலை செய்தவர் தன் தாயாரே என்பதை உறுதிப்படுத்த வழக்கை நடத்துவார்.



நீதிக்குப்பின் பாசம் – ரெங்காராவ், எம்.ஜி.ஆர்.

*இதுவே அவரது தொழில் தர்மம். ஆனால் எம்.ஜி.ஆர். மட்டும் தன் தாயார் கொலையாளியாக இருக்க இயலாது, ஏனென்றால் அவர் மருத்துவ சேவை செய்யும் ஒரு சிறந்த மருத்துவர்; அவர் உயிர்களைக் காப்பாற்றத்தான் செய்வாரே தவிர கொலை செய்ய மாட்டார் என்ற உறுதியான எண்ணத்துடன் தன் தாயாருக்கு ஆதரவாக வழக்கை நடத்துவார். இக்கதையில் மூவரும் நல்லவர்கள் இது தான் தர்ம சங்கடம். தர்மத்துக்கு இடையில் ஏற்பட்ட சங்கடம். மூவருமே தம் தொழில் தர்மத்தின்படி செயல்படுவர். அதனால் மிகுந்த சங்கடத்துக்கு உள்ளாவர்.*

*அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற கம்பராமாயணப் பாவிகத்தின் படி அண்ணன் தம்பி, அப்பா மகன் என்ற பாசப் போராட்டத்திற்கிடையிலும் இப்படத்திலும் நீதி வென்றது. எனவே நீதிக்குப் பின் பாசம் என்ற உயர்ந்த கருத்து வலியுறுத்தப்பட்டது. தவறு செய்தவர் தன் உறவினர் என்பதற்காக காப்பாற்ற வைக்கும் முயற்சியில் எவரும் ஈடுபடக்கூடாது என்ற உயர்ந்த கருத்தை உலகுக்கு எடுத்துக் கூறும் விதமாக நீதிக்கு பின் பாசம் படத்தில் மூவரும் நடித்திருந்தனர்.*

***மாட்டுக்கார வேலன்***

*எம்.ஜி.ஆர். மாட்டுக்கார வேலன் படத்தில் இரண்டு வேடங்களில் நடித்திருப்பார். மாட்டுக்கார வேலனாக ஒரு கதாபாத்திரமும், வக்கீல் ரகுவாக இன்னொரு கதாபாத்திரமும் அமைந்தது. இருவருமே மூத்த வக்கீல் சட்டநாதன் வீட்டில் ரகு என்று நினைத்து நாதன் வேலனை அங்கு தங்க*



மாட்டுக்கார வேலன் – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்.

அனுமதித்தார். அப்போது அவரது மகள் ஜெயா வேலனை வக்கீல் என்று நினைத்து காதலிப்பார். வக்கீல் ரகு அங்கு வந்த பிறகு, சில நாள் கழித்து உண்மை தெரிய வரும். இதில் வக்கீல் கதாபாத்திரத்தை விட வேலன் கதாபாத்திரத்துக்கு தான் முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால் தன் தந்தையைக் கொன்ற ஆளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இருவரும் இணைந்து செயல்பட்டனர். இது ஒரு வக்கீலின் கதையாக அமையவில்லை. தன் தந்தையைக் கொன்றவனைக் கண்டுபிடித்து சட்டத்திடம் ஒப்படைக்கும் கதையாக அமைந்தது.

**கலங்கரை விளக்கம்**

கலங்கரை விளக்கம் படத்தில் எம்.ஜி.ஆர். வக்கீல் ரவி என்ற கதாபாத்திரத்தில் நடித்தார். இப்படத்தின் மறுபதிப்பாகவே ரஜினி நடித்த சந்திரமுகி அமைந்தது. இரண்டிலும் ஒரு கதாநாயகி தன்னை ஒரு வரலாற்றுக் கதாபாத்திரமாக கற்பனை

செய்துகொண்டு இரட்டை வாழ்க்கை வாழ்கிறாள். அவளைக் அந்தக் கற்பனை கதாபாத்திரப் பிடியில் இருந்து வெளியே கொண்டுவரும் முயற்சியில் கதாநாயகன் ஈடுபடுகிறான். கலங்கரை விளக்கத்தில் கதாநாயகன் ஒரு வக்கீல். இப்படத்தில் கதாநாயகி கொலையுண்டு இறந்து போவாள் அவளுக்குப் பதில் அவளை போன்ற தோற்றத்துடன் இருக்கும் மற்றொருத்தி வருவாள். வக்கீலாக வரும் எம்.ஜி.ஆர். இந்த ஆள் மாறாட்டத்தைக் கண்டுபிடித்து உண்மையை உணர்த்துவார் சந்திரமுகியில் கதாநாயகன் மனநல மருத்துவராக வந்து கற்பனைப்பிடியில் இருந்த ஒரு கதாநாயகியை மீட்பார்.

கலங்கரை விளக்கம் படத்தில் எம்.ஜி.ஆர். வழக்கு நடத்தும் வக்கீலாக இல்லாமல் துப்பறியும் அதிகாரி போல வருவார். இதுவும் மாட்டுக்கார வேலனைப் போல ஒரு துப்பறியும் படமாக அமைந்தது.



கலங்கரை விளக்கம் – எம்.ஜி.ஆர். , சரோஜாதேவி

## காவலதிகாரியாக இருந்து வழக்கு நடத்துதல்

சங்கே முழங்கு (1972) என்ற படத்தில் ஒரு வைர வியாபாரியின் வளர்ப்பு மகனாக வரும் எம்.ஜி.ஆர்., தந்தையைக் கொன்று விட்டதாக பொய்க் குற்றச்சாட்டுக்கு ஆளாகி ஊரைவிட்டு ஓடிப்போய் மாறுவேடத்தில் கிருபால் சிங் என்ற பெயரில் ஒரு பஞ்சாபியாக படித்துத் தேறி தனது சொந்த ஊருக்கு வந்து தன் தந்தையின் கொலை வழக்கை மீண்டும் விசாரிப்பார் இவ்வழக்கில் காவல்துறை அதிகாரி என்ற போதிலும் ஒரு கைதேர்ந்த வக்கீலைப் போல நீதிமன்றத்தில் கொலையாளி அசோகனை விசாரணை செய்வார். இக்காட்சி மிகச்சிறப்பாக அமைந்து ரசிகர்களின் மனதை கவர்ந்தது. இக்காட்சி சிறப்பாக அமைவதற்கு முக்கிய காரணம் கே எஸ் கோபால கிருஷ்ணனின் வசனங்களாகும். கே எஸ் கோபாலகிருஷ்ணன் எம்.ஜி.ஆருக்கு வசனம் எழுதிய ஒரே படம் சங்கே முழங்கு..



சங்கே முழங்கு – எம்.ஜி.ஆர். , அசோகன்

## *வக்கீலின் தொழில் தர்மம் எது?*

*நீதியின்பால் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர். தனது படங்களில் நீதி பிறழும் போது அதனைக் கண்டித்தார். வக்கீலின் தொழில் தர்மம் என்பது நீதியை நிலை நாட்டுவதல்ல கட்சிக்காரரைக் காப்பாற்றுவது என்ற கருத்தை முறியடிக்கும் வகையில் ஒரு படம் எடுத்தார் அதுவே ரிக்க்ஷாக்காரன். இப்படத்தில் ஒரு கொலைகாரன் [அசோகன்] தன் உறவினரின் [மேஜர் சுந்தரராஜன்] உதவியுடன் வழக்கு நடத்த முயன்ற போது கொலை செய்யப்பட்டவரின் குழந்தையைக் கொண்டு வந்து எம்.ஜி.ஆர். அந்த வக்கீலின் தொழில் தர்மத்தை அவருக்கு உணர்த்துவார். அக் காட்சி வருமாறு:*

***அசோகன் :*** *உன்னை யார் இங்கே உள்ளேவிட்டது? நீ ஏன் இங்க வந்த?*

***எம்.ஜி.ஆர். :*** *ஒரு கொலைகாரனுக்கு உதவி செய்யாதீங்கனு வக்கீல் கிட்ட சொல்லத்தான் வந்திருக்கேன்.*

***அசோகன் :*** *பாவம் உனக்காக நான் பரிதாபப்படுறேன்.*

***எம்.ஜி.ஆர். :*** *பரிதாபப்படுகிறதுக்கு ஒன்னு நல்லவரா இருக்கனும், இல்லையினா வல்லவனா இருக்கனும் நீ ரெண்டுங்கெட்டான் . . .*

***அசோகன் :*** *ஒரு ரிக்க்ஷாகாரனுக்கு இவ்வளவு திமிரா?*

***எம்.ஜி.ஆர். :*** *ஊரார் சோத்துல உடல வளக்குற ஒரு கொலைகாரனுக்கே இவ்வளவு திமிர்*

இருக்கும்போது, உழைச்சு சம்பாதிக்கிற ரிக்ஷாகாரனுக்கு ஏன் இருக்கக்கூடாது?

**அசோகன் :** நான் துப்பாக்கியாலயே பேசி பழக்கப்பட்டவன்.

**எம்.ஜி.ஆர்.:** நான் பட்டாளத்துலேயே பீரங்கிகளுக்கு மத்தியிலேயே புகுந்து விளையாடினவன்.

**அசோகன் :** என்னை மிருகமாக்காதே

எம்.ஜி.ஆர். : இனிமேல்தான் ஆகப்போறீயா?

**அசோகன் :** என்ன சொன்ன?

மேஜர் சுந்தர்ராஜன் : கைலாசம் கொஞ்சம் பொறுமையா இரு. என்னப்பா, என்ன கலாட்டா செய்ற. இங்க வந்து?

**எம்.ஜி.ஆர். :** ஐய்யய்யோ கலாட்டா பண்ண வரலீங்க, ஒரு கொலைகாரனுக்காக நீங்க வக்காலத்து வாங்கி வாதாட வேண்டாம்னு கேட்டுக்க வந்தேன்.



ரிக்ஷாகாரன் – மேஜர்.சுந்தர் ராஜன், அசோகன், எம்.ஜி.ஆர்.

***மேஜர் சுந்தர்ராஜன் :*** *என்ன!*

***எம்.ஜி.ஆர். :*** *ஆமா, மாணிக்கம் இந்த பாவியால படுகொலை செய்யப்பட்டதால அனாதையாகி இருக்கும் இந்த பச்சகுழந்தய பாருங்க.*

***அசோகன் :*** *இந்த குழந்தையக் காட்டி ஐந்தோ பத்தோ வாங்கிட்டுப் போகலாம்னு வந்தியா?*

***எம்.ஜி.ஆர். :*** *ச்சை நான் ஒன்னும் பிச்சை கேட்க வரல, கொலை செய்தவன் என்னைக்குமே தப்ப முடியாதுனு எச்சரிக்க வந்தேன்.*

***மேஜர் சுந்தர்ராஜன் :*** *என்னப்பா, எங்கே வந்து யாருக்கு எச்சரிக்கை விடுற?*

***எம்.ஜி.ஆர். :*** *ஐய்யய்யோ கொலையை கண்ணால பார்த்த நீங்களே, கொலையாளிக்காக வாதாட போறீங்களே இது தர்மமா சார்?*

***மேஜர் சுந்தர்ராஜன் :*** *எனக்கே நீ தர்மம் உபதேசம் பண்ணுறியா? தன் கட்சிக்காரரர் குற்றவாளியோ? நிரபராதியோ அதப்பத்தி வக்கீலுக்கு கவலையில்லை, தான் எடுத்துக்கிட்ட வழக்குல வெற்றியடையிறதுதான் ஒரு வக்கீலுடைய தர்மம்.*

***எம்.ஜி.ஆர். :*** *அதுக்காக! மனசறிஞ்ச ஒரு கொலைகாரனுக்கு விடுதலை வாங்கிக்கொடுக்குறது சமூக துரோகமில்லையா?*

***மேஜர் சுந்தர்ராஜன் :*** *எது துரோகம் எது நியாயம்னு எனக்கு தெரியும், நீ போகலாம்.*

*அசோகன் ஏளனமாக சிரிப்பதைப் பார்த்து . . .*

**எம்.ஜி.ஆர். :** இந்த சிரிப்பே உங்களை எரிக்கும் நெருப்பாகப் போகுது. இந்த குழந்தையின் மீது ஆணை! உன்னைத் தூக்குமேடையில் ஏத்துறவரைக்கும் நான் ஓயப்போவதேயில்லை.

பின்னர், வக்கீலின் தொழில் தர்மம் பற்றி எம்.ஜி.ஆர். ஒரு பாட்டு பாடுவார் அதில்

"நாணல் போல வளைவதுதான் சட்டமாகுமா?-அதை

வளைப்பதற்கு வழக்கறிஞர் பட்டம் வேணுமா?

தர்மத் தாயின் பிள்ளைகள்

தாயின் கண்ணை மறைப்பதா?

உண்மைதன்னை ஊமையாக்கித்

தலைகுனிய வைப்பதா?

தோட்டம் காக்கப் போட்ட வேலி

பயிரைத் மேய்வதோ

அதைக் கேள்வி கேட்க ஆளில்லாமல்

பார்த்து நிற்பதோ.."

என்று பாடும்போது வக்கீல்களைத் தர்மத் தாயின் பிள்ளைகள் என குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் தர்மத்தைக் கடைப்பிடித்து நீதியை நிலைநாட்டுவது வக்கீலின் பணியாகும். அத்தகைய சிறப்பான பணியில் ஈடுபட்டிருக்கும் வக்கீல்கள் சட்டத்தைத் தனக்கு சாதகமாக வளைக்கக் கூடாது. குற்றவாளிக்கு ஆதரவாக இருந்த வக்கீல் ஒருவர் நீதிபதியாகி உயர்பதவியில் இருக்கும் போது அவர்

முறையான நீதி வழங்குவார் என்ற நம்பிக்கை அற்றுப் போகிறது.

## நிஜ வாழ்வில் வக்கீலை மதித்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரைச் சந்திக்க பலர் காத்திருந்த போது அங்கு தனது வக்கீல் தொழிலை மேற்கொள்ளும் முன்பாக ஆசி வாங்க வந்திருந்த சதாசிவம் என்பவரை முதலில் வரச் சொல்லி பேசினார். 'உங்கள் தொழிலில் காலம் பொன் போன்றது எனவே உங்களைக் காக்க வைக்காமல் அழைத்துப் பேசினேன். எப்போதும் நீதிக்காக வாதாடுங்கள். உங்களின் வாழ்க்கை செழிப்பாக இருக்கும்' என்று வாழ்த்தி அனுப்பினார். அவரே சிறந்த வழியில் வக்கீல் தொழில் செய்து பின்னர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகி இன்று கேரளாவின் ஆளுநராக உயர் பதவி வகித்து வரும் சதாசிவம் ஆவார்.

கற்பக விநாயகம் என்ற இளைஞர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர் அவர் ஒரு நாள் எம்.ஜி.ஆரைச் சந்தித்து 'நான் நடிகனாக ஆசைப்படுகிறேன்' என்று தனது ஆசையை எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார். அதற்கு எம்.ஜி.ஆர். "நீங்கள் நடிகர் ஆகலாம். ஆனால் புகழ் பெற்ற நடிகராக இருக்கும் நான் உங்களைப் போல ஒரு வக்கீல் ஆக முடியாது. உங்கள் படிப்பின் மதிப்பை உணர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் படித்த படிப்புக்கேற்ற தொழிலைத் தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்டு செய்து வாருங்கள். உங்களுக்குப் பொன்னான எதிர்காலம் காத்திருக்கிறது. எங்களுக்குச் சிறு வயதில் படிக்க வசதியில்லாத காரணத்தால் நாங்கள் நடிகர் ஆனோம். உங்களுக்குப் படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதைப்

பயன்படுத்திக்கொண்டு சமுதாயத்துக்கு நன்மை செய்யுங்கள்'' என்றார். கற்பக விநாயகம் அவர்கள் சிறப்பாக வக்கீல் தொழில் செய்து பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியும் ஆனார்.

**நிறைவு**

பெரிய வக்கீலுக்கும் சின்ன வக்கீலுக்கும் சட்ட நூலிலுள்ள ஷரத்துக்கள் ஒன்றுதான் இவர்கள் ஒவ்வொருவரும் சட்டத்திற்கு தான் தரும் கருத்து விளக்கத்தின் வழியே அதன் நுட்பங்கள் வேறுபடுகின்றன. இந்த நுட்பங்களைக் கொண்டு தான் நீதிமன்றத்தில் நல்லவன் கெட்டவன் ஆகிறான். கெட்டவன் நல்லவன் ஆகிறான். இதனால் மட்டுமே கீழ் கோர்ட்டில் கெட்டவன் [குற்றவாளி] என்று தீர்ப்பளிக்கப் பட்டவன், மேல் கோர்ட்டில் நல்லவன் என்ற தீர்ப்பைப் பெறுகிறான். ஒரு வக்கீல் தன் அறிவைப் பயன்படுத்தி சட்டக் கருத்துக்களின் நுணுக்கத்தை நீதிக்காகப் பயன்படுத்த வேண்டுமே தவிர தன்னுடைய வருமானத்துக்கும் பெயருக்கும் புகழுக்கும் விளம்பரத்துக்கும் பயன்படுத்தக் கூடாது. இவற்றை எடுத்துக் காட்டும் வகையில் எம்.ஜி.ஆர். ஏற்றுள்ள வக்கீல் கதாபாத்திரங்கள் அமைந்துள்ளன.

.

# *5. பத்திரிக்கையாளராக எம்.ஜி.ஆர்.*

*எம்.ஜி.ஆர். பத்திரிகையாளராக சந்திரோதயம் என்ற படத்தில் நடித்தார். பத்திரிகை அதிபராக எம் ஆர் ராதா நடிக்க, தினக் கவர்ச்சி என்ற பத்திரிகையின் புகைப்படக்காரராக நாகேஷ் நடித்தார். எம்ஆர் ராதா பத்திரிக்கை தர்மங்களைப் பின்பற்றாமல் விற்பனை அதிகரிக்க வேண்டும் என்ற ஒரே கொள்கை கொண்டவராக செய்தியைத் திரித்தும் மாற்றியும் வெளியிடுவார். இதனால் பலர் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக ஒரு இளம் பெண்ணின் திருமணம் நின்றுவிட்டது. அவளை வளர்த்த பெற்றோர் தூக்கு மாட்டி இறந்து போயினர். ஆதரவு இல்லாமல் தனது ஊரை விட்டு சென்னைக்கு வந்த அப்பெண்ணை ஒரு பணக்கார இளைஞன் பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்றான். இவ்வாறு பத்திரிகையாளர் தன் தொழில் தர்மத்தை மீறியதால் மற்றவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதை சந்திரோதயம் படம் விளக்குகிறது.*

**செய்தி என்றால் என்ன ?**

*செய்தி என்பது 4 W ஒரு Hஇல் தொடங்கும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதாக இருக்க*

வேண்டும். அதாவது *what when where why* என *w* வில் தொடங்கும் நான்கு கேள்விகளுக்கும் *H* என்பதில் *How* என்ற கேள்விக்கும் பதில் அளிப்பது செய்தி ஆகும். என்ன நடந்தது? எங்கு நடந்தது? ஏன் நடந்தது? எப்படி நடந்தது? யார் செய்தது? யாரால்



நடந்தது? என்ற கேள்விகளுக்கு ஒரு செய்தி பதிலளிக்க வேண்டும். பதில்களில் ஏதேனும் ஒன்றை திரித்தும் மாற்றியும் செய்தியாளர் எழுதினால் அல்லது பதிப்பாளர் செய்தியை வெளியிட்டால் அது தவறான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

**பத்திரிகை தர்மம் மீறப்படுதல்**

பத்திரிக்கை நிருபரான எம்.ஜி.ஆர். எழுதிக் கொண்டு வரும் செய்தியில் இருந்த உண்மைத்தன்மையை மாற்றி பரபரப்பூட்டுவதற்காக பத்திரிக்கை அதிபர் திரித்து வெளியிடுவது பத்திரிக்கை தர்மத்துக்கு புறம்பானது. இதை தொடர்ந்து ஒரு பத்திரிகை செய்து வருவதை சந்திரோதயம் படத்தில் எம்.ஜி.ஆர். காட்டியிருப்பார்.

பெற்றோர் யாரென்று தெரியாததால் நின்று போன ஒரு பெண்ணின் திருமணத்தை பெண்ணின் நடத்தை மீது சந்தேகம் ஏற்பட்டதால் நின்றுவிட்டது என என்று எம் ஆர் ராதா தானாகவே ஒரு தவறான காரணத்தை அச்செய்தியில் இணைத்து திரித்துவிடுவார். செய்தியை திரித்து வெளியிட்டதால் பத்திரிகையாளர் தர்மம் கெட்டுவிட்டது. அந்த பெண்ணின் வாழ்க்கையும் வேதனைக்கு உள்ளாகிவிட்டது. ஒவ்வொருவரும் அவரவர் தொழில் தர்மத்தைப் பின்பற்றாவிட்டால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்பது இப்படத்தின் மூலமாக காட்டப்பட்டது.

**பத்திரிக்கை தர்மம் குறித்த விவாதம்**

எம்.ஜி.ஆர். தான் கொடுத்த சரியான செய்தியை ஏன் தவறாக வெளியிட்டீர்கள் என்று பத்திரிக்கை அதிபரிடம் வாதிடுகிறார்.



சந்திரோதயம் – எம்.ஜி.ஆர். , எம்.ஆர்.ராதா

***எம்.ஜி.ஆர். :*** *அநியாயம், அக்கிரமம். கமலாவுடைய கல்யாணம் கள்ளக்காதலால் நின்னுதுனு ஏன் போட்டீங்க?*

*எம்.ஆர்.ராதா : அது என் சொந்த விசயம்.*

*எம்.ஜி.ஆர். : ஓஹோ, நான் கொடுத்த செய்தியை ஏன் மாத்திப்போட்டீங்க? ஒரு உயிரை அநியாயமா குடிச்சிட்டிங்க, ஒரு பெண்ணுடைய வாழ்வையே பாழாக்கிட்டீங்க இது உங்க சொந்த விசயம் இல்லை, இதுக்கு நீங்க பதில் சொல்லித்தான் தீரணும்.*

***எம்.ஆர்.ராதா :*** *சந்திரா நீ யாரோட மோதிப்பாக்குற?*

***எம்.ஜி.ஆர். :*** *நானா? ஹும் என் எதிரிகூட எனக்கு சமமாக இல்லைனா அலட்சியப்படுத்துறவன் நான் , அது கிடக்கட்டும் ஒரு கற்புள்ள பெண்ணை களங்கம் நெறஞ்சவள்னு போட்டுருக்கீங்களே இதுக்கு என்ன ஆதாரம்? எனக்கு இப்ப தெரிஞ்சாகணும்.*

**எம்.ஆர்.ராதா :** காரணம் உனக்கு சொல்லவேண்டிய அவசியம் இல்லை, நான் முதலாளி, நீ தொழிலாளி, என் கோபத்தை கிளராதே நான் நெனச்சேனால்? . . .



***எம்.ஜி.ஆர். :*** *குடை பிடிச்சா சூரியன் மறையாது மத்தவங்க பார்வைக்கு உங்க முகம்தான் மறையும். சமுதாயத்துக்கு தொண்டு செய்யவேண்டிய புனிதமான பத்திரிக்கை தொழிலை ஏன் துரோகத்துக்கு பயன்படுத்துறீங்க? இப்படி தவறான செய்திகளை வெளியிடுறனால உலகத்துல எத்தனை பேரோட வாழ்க்கை பாழாயிருக்கு, எத்தனை தாய்மார்கள் கண்ணீர் தடாகத்துல மிதக்குறாங்க, அந்த கண்ணீரெல்லாம் உங்களை சும்மாவிடாது ஆமா . .*

***எம்.ஆர்.ராதா :*** *என்ன செய்யும்? கண்ணீரெல்லாம் என்னை குளிப்பாட்டுமா? போவியா . .*

*என்று அலட்சியமாகப் பதில் அளித்ததால் எம்.ஜி.ஆர். அங்கிருந்து விலகி தனியாக தனது பெயரில் சந்திரோதயம் என்ற பத்திரிகையைத் தொடங்குகிறார்.*

### கவர்ச்சிப் புகைப்படம் வெளியிடுதல்

*நாகேஷ் தினக்கவர்ச்சி பத்திரிகையில் புகைப்படக்காரராக இருப்பார். அவருக்கும் புகைப்பட தர்மத்தை மீற வேண்டிய நெருக்கடி கொடுக்கப்படுகிறது. அவர் எடுத்த அழகான படங்களை பதிப்பாளர் கேலி செய்து கண்டனம் தெரிவிக்கிறார். பெண்களைக் கவர்ச்சியாகப் படம் எடுத்துக் கொண்டுவரும்படி அவருக்கு நெருக்கடி கொடுக்கிறார்.*

***எம்.ஆர்.ராதா :*** *என்னய்யா படம் எடுத்த? கவர்ச்சிக்கன்னி படம் எடுத்துயே கவர்ச்சி என்ன*

*இருக்கு? என்ன இருக்கு கழுத்து இருக்கு, இதாக் கவர்ச்சி?*

**நாகேஷ் :** *அந்தம்மாவை எவ்வளவு எடுத்தாலும் அவ்வளவுதாங்க.*

**எம்.ஆர்.ராதா :** *என்னய்யா அந்தம்மாவ எவ்வளவு எடுத்தாலும்னு . . . என்னய்யா தலைவலிக்கு தலையில கை வச்ச மாதிரி, அப்படியே கையை கொஞ்சம் மேலே தூக்கினா எப்படி இருந்துருக்கும் ஜனங்க எவ்வளவு வாங்குவாங்க.*

**நாகேஷ் :** *சார் கவர்ச்சி படம் எடுக்குறதால ரோட்டுல போகும்போது என்னையே கவர்ச்சிகன்னி கவர்ச்சி கன்னின்னு கூப்பிட்டு பொம்பளையாக்கிறாங்க, ரொம்ப கஷ்டமா இருக்கு.*

**எம்.ஆர்.ராதா :** *என்னய்யா பத்து பேரு பத்துவிதமா பேசத்தான்யா செய்வாங்க, அதுக்காக நம்ம பிசினஸ் பாலிசியை மாத்திக்க முடியுமா? ஏய்யா நல்லவன்,*



*சந்திரோதயம் – எம்.ஆர்.ராதா, நாகேஷ்*

கெட்டவன், யோக்கியன், அயோக்கியன், படிச்சவன், படிக்காதவன்னு ஏன் இந்த பேப்பர காலம்பர வாங்குறான்? 50 பெர்சன்ட் செக்ஸ் இருக்கனும், 50 பெர்சன்ட் க்ரைம் இருக்கனும் தெரியுமா?

**நாகேஷ் :** அதான் இருக்குதே (எம்.ஆர்.ராதாவையும், செக்ரட்டரியையும் காண்பித்து) 50 செர்சன்ட் க்ரைம், 50 பெர்சன்ட் செக்ஸ் அப்புறம் என்ன?.

**எம்.ஆர்.ராதா :** அது ஆபீசுக்குள்ளயில இருக்குது. ஜனங்களுக்கு தெரிய வேணாமா? என்ன பேசுற நீ?

**நாகேஷ் :** அதெல்லாம் என்னால முடியாது சார், கையை தூக்கிட்டேன்.

**எம்.ஆர்.ராதா :** ம் ம் தூக்கிட்டியா? இப்ப தூக்க தெரியுதுல உனக்கு. இப்படி நீ தூக்குனா எவன் பார்ப்பான். அந்த பொம்பளய இதேக் கையை கொஞ்சம் தூக்க வச்சு பூமிக்குள்ள கேமரா வச்சு எடுத்திருந்தால், மண்டய ஒடச்சில்லயா பத்திரிக்கை வாங்கியிருப்பான்.

**நாகேஷ் :** போதும் சார், இப்படி எடுக்குறதுக்கே என் பொண்டாட்டி அகல்யா கன்னாபின்னானு கேள்வி கேக்குறாள். அதெல்லாம் என்னால முடியாது சார்.

**எம்.ஆர்.ராதா :** என்ன முடியாது? என்ன மிரட்டுற. நான் யார் தெரியுமுல துரியோதணன் வணங்கா முடி மன்னன் ஞாபகம் வச்சுக்கோ. ஏதோ நானும் ஊர்ல ஒரு பெரிய மனுஷன், தமிழ் வளர்ச்சிக்கு நாமும் ஏதாவது பாடுபடனுமே அப்படினு இந்த பத்திரிக்கை ஆரம்பிச்சு வேலை செய்யுறேன். பொழக்கிறதுக்கா இத நடத்துறேன், நெனச்சிக்கிட்டு

இருக்க பாரு. மங்களகரமான பத்திரிக்கையாச்சே இது.

**நாகேஷ் :** நீங்க சொல்றீங்க மங்களகரமான பத்திரிக்கையினு, ஜனங்க இத மஞ்சள் பத்திரிக்கைங்குறான்.

பத்திரிக்கை அதிபரின் நெருக்கடியால் புகைப்படக்காரரர் நாகேஷ் சாலையில் கண்ட ஒரு சாமானிய பெண்ணையும் கூட கவர்ச்சியாகப் படம் பிடிக்க வேண்டும் இல்லையென்றால் தன் வேலை போய்விடும் என்ற அச்சத்தில் அதுபோல ஒரு படம் எடுத்துக் கொண்டு வந்தார். அப்படம் ஏற்கனவே திருமணம் நின்று போன வருத்தத்தில் இருந்த பெண்ணின் படம் என்பதால் அவளது வாழ்க்கை மேலும் பல துயரங்களைச் சந்திக்க இப்படம் காரணமாகிவிடும்.

**பத்திரிகைத் தொழிலில் நெருக்கடி**

முள்ளில் சிக்கிய சேலையை நீக்கி எடுக்கும்போது நாகேஷ் அப்பெண்ணை படம்பிடித்து விடுவார். ஆக புகைப்படம் எடுப்பதிலும் தொழில் தர்மம் மீறப்படுகிறது. இதுவும் மற்றவர்களின் வாழ்க்கையை பாதிக்கின்றது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் சந்திரோதயம் அமைந்தது. செய்தி நிருபராக தானும் புகைப்படக் காரராக நாகேஷையும் நடிக்க வைத்து இப்படத்தை முழுக்க ஓர் ஆவணப்படம் போல எடுத்த எம்.ஜி.ஆர். இதை சுவாரசியமானதாகவும் காட்டியிருந்தார். இப்படத்த்தை மிகவும் கவனம் செலுத்தி எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். அவருக்கும் ஒரு நாளிதழுக்கும் அப்போது கருத்து முரண்பாடு ஏற்பட்டதால்




இப்படத்தை குறிப்பிட்ட நோக்கத்துக்காகவே திட்டமிட்டு எடுக்கச் செய்து நடித்தார். இப்படத்தில் வசனத்தை சிறப்பாக ஏ.கே. விஸ்வம் என்பவரைக் கொண்டு எழுத வைத்தார். இவரது உறவினர் கே சங்கர் இயக்கினார். படம் 27-5-1966 அன்று வெளிவந்தது.

*தினசரிப் பத்திரிகையை விட்டு வெளியே வந்த எம்.ஜி.ஆருடைய கதாபாத்திர பெயரான சந்திரன் அதைக்கொண்டு சந்திரோதயம் என புதிய பத்திரிகையை தொடங்குவார். இப்பத்திரிகை பத்திரிகைத் தொழில் தர்மத்தைப் பின்பற்றும் முறையில் சிறப்பாக நடத்தப்படும்.*

*சந்திரோதயம் படத்தின் தொடக்கத்தில் பெயர் பட்டியல் காட்டப்படும்போது பாவேந்தர் பாரதிதாசன் பாடிய*

*“புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட*

*போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்”*

*என்ற பாடல் பின்னணியில் ஒலிக்கும். அப்போது பத்திரிக்கை அலுவலகத்தில் நடக்கும் அன்றாடப் பணிகளும் காட்டப்படும். பொதுவாக எம்.ஜி.ஆர். படங்களில் பெயர் போடும்போது அவரது தொழில் தொடர்பான பொது நடைமுறைகளைக் காட்டுவது மரபு. பின்பு படம் தொடங்கியதும் அவரது தனி வாழ்வும் பொதுவாழ்வும் பிணைக்கப்பட்ட கதைக்குள் பயணம் தொடங்கிவிடும். [புதியதோர் உலகம் செய்வோம் என்ற பாரதிதாசன் பாடல் பல்லாண்டு வாழ்க படத்திலும் முழுப் பாடலாக எம்.ஜி.ஆர். லதா மற்றும் எம்.ஜி.ஆரால் திருத்தப்பட்ட ஐந்து பேரும் பாடுவதாக அமைந்திருக்கும்.]*

### ***ஐந்தாவது தூண்***

*பத்திரிகைகள் என்பது ஜன நாயகத்தின் ஐந்தாவது தூண் என்று அறிஞர்கள் போற்றுவர். பேனாமுனை, வாள் முனையை விட*

கூர்மையானது, என்றும் எழுத்தின் வலிமையைப் போற்றுவர். எழுத்துக்களால் இந்நாட்டில் பெரும் புரட்சியை சமுதாய மாற்றத்தை கொண்டுவர முடியும் என்பதை உணர்ந்த திராவிட இயக்கங்கள் விடுதலை திராவிட நாடு, தென்னகம், நம் நாடு, சமூக நீதி என்று பல பத்திரிகைகளை நடத்தின.

தினத்தந்தி, தினமலர் தினகரன், தினமணி போன்ற பிரபல நாளிதழ்களும் தமிழ்நாட்டில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் பல பதிப்புகளைக் கண்டன. பத்திரிகைத் தொழில் தர்மம் என்பது பத்திரிகை சட்டங்கள் என தனியான சட்ட வகைகளும் உண்டு. நெருக்கடி நிலை அறிவிக்கப்படும் போது வாய் பூட்டு சட்டம் நடைமுறைக்கு வரும். அப்போது பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க இயலாது.

**அரசின் அச்சுறுத்தல்**

2020 சென்னை புத்தக கண்காட்சியில் அரசை எதிர்த்து எழுதிய நூலை விற்பனைக்கு வைத்திருந்தனர் என்பதற்காக அப்புத்தகம் வைத்திருந்த அரங்கு மூடப்பட்டது. இவ்வாறு எழுத்துச் சுதந்திரம் அரசால் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதுண்டு. இதுவும் ஆபத்தானதே. அதேவேளையில் எழுதுவோருடைய பேனாவை நல்ல பல காரியங்களுக்காக பயன்படுத்த வேண்டுமே அன்றி விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தவறானவற்றை எழுதி வெளியிடக்கூடாது.

***பத்திரிகையிடம் பணிந்த தமிழக அரசு***

*எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஆனந்த விகடன் பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டது. இதில் மேடையில் வீற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சரை பார்த்து கீழே அமர்ந்திருக்கும் இருவர் அவர்கள் கொள்ளையனை போலவும் திருடனைப் போலவும் இருப்பதாகவும் கேலி படம் வெளியிட்டது. இப்படம் பத்திரிகை தர்மத்துக்கு முரணானது. ஆதாரமில்லாமல் நேரடியாக ஒருவரை திருடன் என்றும் கொள்ளைக்காரன் என்றும் திருடன் என்றும் சுட்டக் கூடாது எனச் சட்டமன்ற சபாநாயகர் பி ஹெச் பாண்டியன் தெரிவித்தார். இதனால் தமிழக அரசு ஆனந்த விகடன் மீது வழக்கு தொடுத்தது. ஆனால் இவ்வழக்கில் தமிழக அரசு தோற்றுப்போனது.*

*ஆனந்த விகடன் பத்திரிக்கை அதிபரான பாலா எம்.ஜி.ஆரை கதாநாயகனாக் கொண்டு ஜன்ஜிர் என்ற ஹிந்திப்படத்தை தமிழில் மாற்றி சிரித்து வாழ வேண்டும் [31-11-1974] என்ற பெயரில் எடுத்திருந்தார். அவரது தந்தை எஸ் எஸ் வாசன் படத்தில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். இருவரும் நன்கு அறிமுகமான நிலையில் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்த போது இவ்வழக்கை தமிழக அரசு தொடுத்துத் தோற்றுப் போனது. நீதிமன்றம் தமிழக அரசை ஆனந்த விகடனுக்கு அபராதம் செலுத்தும் படி உத்தரவிட்டது.*

*பத்திரிக்கை அதிபர் பாலா ஆனந்தவிகடன் அலவலகத்தில் தமிழக அரசு அபராதமாக செலுத்திய ஒரு ரூபாயைக் கண்ணாடி பிரேம்*


போட்டு தான் உட்காரும் இடத்திற்கு மேலே சுவரில் மாட்டி வைத்தார். இந்நிகழ்வு பத்திரிகையின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

***காரிருள் அகத்தில் நல்ல***
***கதிரொளி நீ தான்! இந்தப்***
***பாரிடைத் துயில்வோர் கண்ணில்***
***பாய்ந்திடும் எழுச்சி நீ தான்!***
***ஊரினை நாட்டை இந்த***
***உலகினை ஒன்று சேர்க்கப்***
***பேரறிவாளர் நெஞ்சில்***
***பிறந்த பத்திரிகைப் பெண்ணே!***



# 6. தொழிலதிபராக எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் தான் நடிக்கும் கதாபாத்திரங்கள் மற்றவருக்குப் பாடமாக அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து செயலாற்றினார். நல்லநேரம் (1972), அன்பே வா (1966), எங்க வீட்டுப் பிள்ளை (1965), நினைத்ததை முடிப்பவன் (1975) போன்ற படங்களில் தொழிலதிபராக நடித்த எம்.ஜி.ஆர். தொழில் அதிபருக்குரிய தொழில் தர்மங்களைப் வெளிப்படுத்தும் வகையில் தனது கதாபாத்திரத்தைச் செம்மைப்படுத்தி காட்சிகளை வடிவமைக்க செய்தார்.



## தொழிலதிபரின் கடமைகள்

எம்.ஜி.ஆர். படங்களில் முதலாளியாக வரும்போது அவர் தொழிலாளிகளிடம் கனிவும் கருணையும் உள்ளவராகவும், அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்பவராகவும், சட்டப்படி அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சலுகைகளைக் கொடுப்பவராகவும், தனது கதாபாத்திரத்தை நுட்பமாகவும் செம்மையாகவும் உருவாக்கினார். மேலும் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் இடத்தில் நானயம் போற்றப்பட வேண்டும் என்பதையும் தன் கதாபாத்திரத்தின் மூலமாக படம் பார்ப்பவர்களுக்குப் பாடமாக உணர்த்தினார்.

## பட்டினப்பாலை காட்டும் வணிக தர்மம்

சங்க இலக்கியமான பட்டினப்பாலை ஒரு பொருளை விற்கும்போதும் வாங்கும்போதும் அதற்குரிய சரியான மதிப்பு வழங்கப்படவேண்டும் கூடுதல் குறைவு இருக்கக் கூடாது என்ற இலக்கணத்தை

கொள்வதும் மிகை கொளாது

கொடுப்பதும் குறை படாது.

என்று விளக்குகிறது. ஒரு பொருளை விற்கும் போது விலைக்கேற்ற சரக்கை வாங்குவோருக்கு கொடுக்க வேண்டும். வாங்குவோரும் கொடுத்த பண மதிப்புக்கு மிகையாக பொருளை வாங்கிவிடக் கூடாது. இதுவே வணிகத்தில் பின்படர்பட் வேண்டிய தொழில் தர்மம் என்று பட்டினப் பாலை விளக்கம் தருகிறது.

## நாணயம் – விளக்கம்

தொழிலதிபர் என்பவர் முதல் போட்டு தொழில் நடத்துபவர் ஆவார். முதல் எனப்படும்

பணத்துக்கு தமிழில் நாணயம் என்ற பெயரும் உண்டு. இச்சொல்லுக்கு சொன்ன சொல் தவறாமை என்ற வேறு பொருளும் இருக்கிறது. எம்.ஜி.ஆர். மீனவ நண்பன் படத்தில் வில்லனைப் பார்த்து ஒரு பாட்டில்

"நீ கொண்ட நாணயம் பூட்டிய வீட்டுக்குள்

சிறையாய் இருக்குதையா

நான் கொண்ட நாணயம் நாட்டிலும் வீட்டிலும்

நிறைவாய் இருக்குதையா"

என்று பாடும் வரிகள் இடம்பெற்றன. எம்.ஜி.ஆர். மீது மக்கள் கொண்டிருந்த அன்புக்குக் காரணம் அவர் சொன்ன சொல் தவறாதவர் என்ற நம்பிக்கை ஆகும். அவர் வாக்கை மக்கள் நம்பினார் மதித்தனர். அதனால் அவர் திமுக நல்லாட்சி தரும் என்று சொன்னதும் அக்கட்சிக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர். 1972 முதல் திமுக ஊழல் கட்சி என்று சொன்னதும் அக்கட்சியை தோற்கடித்தனர். அவரது நாணயம் [நா நயம்] அன்றும் என்றும் மக்களின் நெஞ்சில் மாறாமல் இருக்கிறது.



## எம்.ஜி.ஆர். தரும் நாணய விளக்கம்

நல்ல நேரம் படத்தில் எம்.ஜி.ஆர். ஏற்றுமதி தொழில் நடத்தும் தொழிலதிபராக நடித்தார். அவர் ஒரு சேட்டிடம் கடன் வாங்கி சரக்குகளை வெளிநாட்டுக்கு கப்பலில் அனுப்பினார். எம்.ஜி.ஆர். வாங்கிய கடனை திருப்பி செலுத்த வேண்டிய கெடு முடிய ஒரு வாரம் இருப்பதை நினைவூட்டும் வகையில் சேட்ஜி எம்.ஜி.ஆரை பார்க்க வந்தார். அப்போது அவரிடம்

**எம்.ஜி.ஆர். :** சேட்ஜி எனக்கு எல்லாம் தெரியும், என் வியாபாரத்திற்காக நான் உங்ககிட்ட வாங்குன கடன் முதலும் வட்டியுமாக சேர்ந்து ஆறு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய். நான் திருப்பி தரவேண்டிய கெடு இன்னும் ஒரு வாரம் இருக்குனு ஞாபகப்படுத்த வந்திருங்கீங்க இல்லயா?

**சேட்சி :** ஆ ஆ என்னா ஞாபக சக்தி ராஜுக்குள்ள கணக்குபுள்ளயா இருக்கு .



நல்ல நேரம் – சேட்சி, எம்.ஜி.ஆர். , தேங்காய் சீனிவாசன்

***எம்.ஜி.ஆர். :*** *சேட்ஜி சரக்கெல்லாம் கப்பல்ல ஏறி புறப்பட்டாச்சு, ஒரு வாரத்துக்குள்ள பணம் வந்திரும், பணம் வந்ததும் நானே உங்க வீட்டுக்கு வந்து திருப்பிக் கொடுத்துறேன். பாவம் நீங்க அதுக்காக வரவேண்டாம்.*

***சேட்சி :*** *அடடடடடா என்னா நானயம்! என்னா* ***நானயம்!!***

***எம்.ஜி.ஆர். :*** *ஆமா, கொடுக்குறவுங்களும், வாங்குறவுங்களும் என்னைக்குமே நானயத்தை மறக்கக்கூடாதுங்குறதுக்குத்தான் காசுக்கே நாணயம்னு பேர் வச்சிருக்காங்க.*

***சேட்சி :*** *ஆ ஆ நிம்மில் சரியாச் சொன்னீங்க ராஜு நம்மள் வர்றான்.*

*எம்.ஜி.ஆர். பணம் கொடுக்கல்-வாங்கலில் பின்பற்ற வேண்டிய தர்மம் குறித்து மேற்கண்டவாறு சுருக்கமாக எடுத்துரைப்பார். கப்பல் கவிழ்ந்து சரக்குகள் எல்லாம் மூழ்கிப்போனதால் சேட்ஜிக்கு, எம்.ஜி.ஆர். வாக்களித்தபடி பணம் கொடுக்க இயலாது. உடனே தன்னுடைய யானைகளை மட்டும் அழைத்துக் கொண்டு தான் வாழ்ந்த மிகப் பெரிய பங்களாவையும், அதன் அசையும் அசையா சொத்துக்களையும் கடன்காரரிடம் ஒப்படைத்து விடுவார். இத்தகைய நேர்மை ஒரு தொழிலதிபருக்கு தேவை என்பதை அன்றைக்குத் தான் நடித்த படங்களில் எம்.ஜி.ஆர். விளக்கினார்.*

*உலகமயமாதல் ஆரம்பித்த பிறகு ஒரு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் அவருடைய மற்ற தொழில்களில் லாபம் கிடைக்கும் பட்சத்தில்*

லாபமாக நடக்கும் தொழிலிலிருந்து பெறும் வருமானத்தை கொண்டு அடுத்த நஷ்டத்தை ஈடு கட்ட வேண்டிய தேவையில்லை என்று புதிய விதிமுறை உருவாக்கப்பட்டது. இதனால் ஒரே மனிதர் நடத்திவரும் பல தொழில்களில் ஒரு தொழில் நஷ்டம் அடைந்தால் அவர் நஷ்டத்தை [அல்லது வங்கியில் பெற்ற கடனை] இன்னொரு தொழிலில் கிடைத்த லாபத்தைக் கொண்டு ஈடுகட்ட வேண்டியது இல்லை, நஷ்டம் ஏற்பட்ட தொழிலை மீண்டும் சீர்செய்ய வங்கிகள் மூலமாக மேலும் கடன் பெறலாம். இந்த மறு கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை தொழிலும் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகிறது என்றால் வங்கிக் கடனை திருப்பிச் செலுத்த இயலவில்லை என்று தெரிவிக்கலாம். ஆக இந்தத் தொழிலுக்கு அவர் வாங்கிய கடன் வாராக் கடனாக பதிவுசெய்யப்படும். மற்ற தொழில்கள் லாபகரமாக நடந்து கொண்டே இருக்கும். இது நேர்மையான தொழில்முறை அல்ல எனினும் கார்ப்பரேட் நிறுவனங்களின் செயல்பாட்டையும் லாபத்தையும் கருத்தில்கொண்டு இத்தகைய புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் எம்.ஜி.ஆர். காலத்தில்அவரது படங்களில் தொழில் தர்மம் பாதுக்காக்கப்படும் கதாபாத்திரங்களில் நடித்தார்.

## முதலாளியும் தொழிலாளியும்

அன்பே வா, எங்க வீட்டுப் பிள்ளை ஆகிய படங்களில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஆன உறவு தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. . அன்பே வா படத்தில் மிகப் பெரிய தொழிலதிபராக நடித்த எம்.ஜி.ஆர். பல ஆண்டுகளாக ஓய்வின்றி

உழைத்ததால் மிகவும் களைத்துப் போய் தான் போகும் இடத்தை யாரிடமும் சொல்லாமல் வெளியூருக்கு போய் ஓய்வெடுக்க விரும்புவார். அப்போது தன்னுடைய மேலாளரான ராம்தாஸ் எம்.ஜி.ஆரின் உடல்நலனில் அக்கறை கொண்டு பல மருத்துவர்களை வரவழைப்பார். எம்.ஜி.ஆர். அவர்களிடம் தன்னுடைய களைப்பை எடுத்துக்கூறி அனுப்பிவிடுவார்.

**எம்.ஜி.ஆர். :** மைடியர் டாக்டர்ஸ் எனக்கு ஒன்னுமே இல்ல கொஞ்சம் களைப்பு அவ்வளவுதான் ப்ளீஸ் போயிட்டு வாங்க ப்ளீஸ், ஒரு நிமிஷங்கூட என்னை நிம்மதியா இருக்க விடமாட்டீங்களா?

**ராமதாஸ் :** என்ன சார்? என்ன ஆச்சு?

**எம்.ஜி.ஆர். :** என்ன ஆச்சா? இதெல்லாம் உங்க வேலையா?

**ராமதாஸ் :** இத்தன நாளா நீங்க இப்படி களைச்சுப்போய் இருந்தத நான் பார்த்ததே இல்ல. அதனாலதான் நான் இந்த . . .

எம்.ஜி.ஆர். : ஆமா நான் ஓய்வு எடுத்து எத்தனை நாள் ஆச்சு?

**ராமதாஸ் :** நாள் கணக்கு, வார கணக்கு, மாச கணக்கெல்லாம் தாண்டி வருஷ கணக்குல வந்து நிக்குது.

**எம்.ஜி.ஆர். :** அதனாலதான் களைச்சுப் போயிருக்கேன்.

**ராமதாஸ் :** இளச்சுக்கூட போயிருக்கீங்க . .

***எம்.ஜி.ஆர் :*** *போதும் உங்க அனுதாபம், உழைக்கத் தெரிஞ்சா போதுமா? ஓய்வு எடுத்துக்க தெரிய வேண்டாம்?*

***ராமதாஸ் :*** *ஆமா . .*

***எம்.ஜி.ஆர். :*** *அப்படினா! எனக்கு அது தெரியலன்னு சொல்றீங்களா? ஆல் ரைட் நான் ஓய்வு எடுத்துக்கப்போறேன்.*

***ராமதாஸ் :*** *என்ன சார் திடீர்னு? நேத்துதான வந்தீங்க, நீங்க கவனிக்க வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கு*

***எம்.ஜி.ஆர்.:*** *செக்ரட்டரி, நல்ல நிர்வாகத்தில் உள்ள ஒரு ஸ்தாபனம் உரிமையாளர் இல்லாமயே தானே சரியாக நடக்கும். என் புகழுக்குக் காரணம் தொழிலாளர்கள் தான். உங்களையெல்லாம் நம்பி நான் எத்தனை நாள் வேணும்னாலும் ஓய்வு எடுக்கலாம்.*

***ராமதாஸ் :*** *ஓய்வுக்கு எங்க சார் போறீங்க? இத்தாலியா? பிரான்ஸா? சுவிட்சர்லாந்தா?*



*அன்பே வா – ராமதாஸ், எம்.ஜி.ஆர்.*

***எம்.ஜி.ஆர். :*** எங்க போறேன்னு எனக்கே தெரியாது. எனக்கு பிடித்தமான ஒரு இடத்துக்கு போறேன், போனதும் உங்களுக்கு மட்டும் கடிதம் எழுதுறேன். ஆனா நான் எங்கே இருக்கேன்னு வேற யாருக்குமே தெரியக்கூடாது.

என்று சொல்வார். இந்த உரையாடலில் ஒரு நல்ல நிர்வாகம் என்பது அதன் அதிபர் இல்லாமலேயே சிறப்பாக நடக்கும் என்றது குறிப்பிடத்தக்கது. பணி செய்வோர் தத்தம் பொறுப்புக்களைச் சிறப்பாக உணர்ந்து செய்தால் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அதிபர் தினமும் அங்கிருக்க வேண்டியதில்லை. அனைவரின் பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் ஒரு தொழில் நிலையம் சிறப்பாக நடக்க முக்கிய காரணங்களாகும்.

**தொழிலாளர் நலன்**

எங்க வீட்டுப்பிள்ளை படத்தில் ராமு இளங்கோ என்று இரண்டு வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். ராமு மிகப்பெரிய தொழிலதிபர் ஆனால் அவருக்கு எழுத படிக்கக் கூட தெரியாது. இவருக்குப் பதிலாக இவருடைய வீட்டில் வந்து சேரும் பட்டதாரி இளைஞர் இளங்கோ ஆவார். அக்காள் கணவர் சொத்துக்களை அவருடைய பெயரில் மாற்றி பத்திரம் எழுதியபோது இளங்கோ அதனைப் படித்து பார்த்து கையெழுத்திட மறுத்து விடுவார்.

இளங்கோ தந்தையின் தொழிற்சாலைக்குப் போய் நிர்வாகத்தைத் தானே கவனிக்கத் தொடங்குவார். அப்போது தொழிலாளர்களிடம் அவர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் முறையாக வழங்கப்படும் என்பதையும் தெரிவிப்பார். ஏற்கெனவே அங்கு மேலாளராக

இருந்த மலையப்பரிடம் நிதி நிர்வாகம் குறித்து பேசுவார். அப்போது அங்கு வந்து குழுமியிருந்த தொழிலாளர்களைப் பார்த்து அவர்களின் குறைகளைக் கேட்டறிவார்.

***எம்.ஜி.ஆர் :*** *மலையப்பா கணக்கெல்லாம் இங்க தான இருக்கு எடுத்துட்டு உள்ளே வாங்க. (தொழிலாளிகளை பார்த்து) உங்களுக்கெல்லாம் என்ன வேணும்?*

***தொழிலாளி :*** *ஒரு முக்கியமான விசயமா உங்கள பார்க்க வந்தோம்*

***எம்.ஜி.ஆர். :*** *உள்ள வாங்க . . . ஆமா இதயெல்லாம் ஏன் முன்னாடியே சொல்லிருக்கக்கூடாது நீங்க.*

***தொழிலாளி :*** *எத்தனையே முறை சொன்னோம், கவனிக்கவேயில்லீங்க*

***எம்.ஜி.ஆர். :*** *ஏன் மிஸ்டர் மலையப்பன் இவங்க குறைகளையெல்லாம் ஏன் கவனிக்கல.*

***தங்கவேலு :*** *அய்யயோ அய்யயோ கவனிக்லையா? உங்க மாமா இரண்டு கையால வாரி வாரி*



*எங்க வீட்டு பிள்ளை – நாகேஷ், எம்.ஜி.ஆர்., தங்கவேலு*

*கொடுத்திருக்காரு. அது என்னவோ தெரியலிங்க இந்த வர்க்கத்துக்கு ஒரு சாபக்கேடாவே ஆகிப்போச்சு, என்ன கொடுத்தாலும் பத்தல, போதல, பத்தல, போதல*

***நாகேஷ் :*** *கொடுத்தீரா? எடுத்தீரா?*

***தங்கவேலு :*** *டேய் டேய் வேணாண்டா வேணாண்டா. நாக்கு அழுகி கீழ விழுந்துரும்.*

***எம்.ஜி.ஆர். :*** *உங்க கோரிக்கைப்படி போனஸ் சம்பள உயர்வு உடனடியாக கவனிக்கப்படும்.*

*என்று எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உறுதியளிப்பார்.*

### *தொழிளார்களிடம் இரக்கமில்லாத முதலாளி*

*எம்.ஜி.ஆர். தொழிலாளர் மீது காட்டும் பரிவுக்கு முரண்பட்ட வகையில் வில்லன் நம்பியார் தொழிலாளர்களிடம் கொடுரமாக நடந்து கொள்வதைக் காட்ட ஒரு காட்சி வைக்கப்பட்டது.*

***தொழிலாளி :*** *முதலாளி, நம்ம பெரியசாமிக்கு நல்ல அடிங்க*

***நம்பியார் :*** *ஆபீசுல ஒரு பத்து ரூபாய் வாங்கிக்க, அவன கொண்டுபோய் வீட்டுல போடு*

***தொழிலாளி :*** *பெரிய விபத்துங்க, கையில நல்ல அடி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணுங்க*

***நம்பியார் :*** *ஏய்ய் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகக்கூடாதுனு சொல்றேன் . . .*

***எம்.ஜி.ஆர். :*** *போகத்தான் வேணும், கொண்டு போங்கப்பா . .*

***நம்பியார் :*** *நில்லுங்க. ராமு இதுலயெல்லாம் நீ தலையிடாத உனக்கு புரியாது.*

***எம்.ஜி.ஆர். :*** *காயம்பட்டா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகாம வேறெங்க கொண்டு போவாங்க?*

***நம்பியார் :*** *ராமு ஆஸ்பத்திரக்கு கொண்டு போனால் கேஸ் எழுதுவான், செலவுவேற கேட்பான் . . .*

***எம்.ஜி.ஆர். :*** *நஷ்ட ஈடு கேட்பான் நாமெல்லா கொடுத்துத்தான் தீரணும்.*

***நம்பியார் :*** *ஓஹோ புதுப்பழக்கத்த காட்டுறியா?*

***தங்கவேலு :*** *அது மட்டுமா? இந்த வேலக்கார பயனுங்களுக்கு இடம் கொடுத்தா தலைமேல ஏறி நின்னுக்குவாங்கா*

***எம்.ஜி.ஆர். :*** *உக்காந்து திங்கிற உங்களவிட வேலை செய்து பிழைக்கிறவுங்க எவ்வளவோ உயர்ந்தவுங்க தெரியுமா? போங்கப்பா காரு இல்லனா என் காரை எடுத்துட்டு போங்க.*



*எங்க வீட்டு பிள்ளை – நம்பியார்,, எம்.ஜி.ஆர்., தொழிலாளிகள்*

***நம்பியார் :*** *ஏய்ய் இந்த பசங்க மட்டும் போகட்டும், ஃபேக்ட்ரிய இழுத்து மூடிட்டு போயிருவேன்*

***எம்.ஜி.ஆர். :*** *உஹூம் நீங்க மூடுங்க, அவுங்க கையாலயே திறக்க வைக்கிறேன்.*

***நம்பியார் :*** *ஓஹோ உன் சொத்துனு பேசுறியா?*

***எம்.ஜி.ஆர். :*** *உங்க சொத்தாவது, என் சொத்தாவது எவன் சொத்துக்கோ நம்ம ரெண்டுபேரும் சண்ட போட்டுக்கிட்டிருக்கோம். ஏம்ப்பா நிக்கிறீங்க போங்கப்பா சீக்கிரம்.*

***தொழிலாளி :*** *அப்பாடா இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவு கெடச்சாச்சு, இனிமே நமக்கு நல்ல காலம்தான்.*

***நம்பியார் :*** *ராமு இப்படியெல்லாம் நீ என்னை அவமானப்படுத்துறதுக்கு யார் காரணம்னு தெரிஞ்சிக்கிட்டேன் பேசிக்கிறேன்டா பேசிக்கிறேன்.*

***எம்.ஜி.ஆர். :*** *மிஸ்டர் மலையப்பன், தொழிலாளர்களுக்கெல்லாம் சம பங்கு கொடுக்கணும் வக்கீல பார்த்து உடனே ஏற்பாடு பண்ணு.*

*இரக்கமே இல்லாத நம்பியாரை பார்த்திருந்த தொழிலாளர்கள் அன்பும் பண்பும் நிறைந்த எம்.ஜி.ஆரைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். பயந்தவராக இருந்த முதலாளி ராமுவிடம் அன்பு கொண்டிருந்த காட்சி படத்தின் ஆரம்பத்தில் "கண்களும் காவடி சிந்தாகட்டும்" என்ற பாட்டின் முடிவில் காட்டப்படும்.*

எம்.ஜி.ஆர். தொழிலதிபராக வரும் படங்களில் ஏற்றுள்ள கதாபாத்திரம் தொழில் தர்மத்தை பின்பற்றுவதைக் காட்டும் வசனங்களும் காட்சிகளும் கொண்டனவாக அமைக்கப்பட்டன. திறமையான இயக்குனர்களும் கதாசிரியர்களும் கொண்டு இக்காட்சிகளையும், வசனங்களையும் தந்து உயர்ந்த நோக்கத்திற்கேற்ப அமைத்தார்.

## அனைத்துத் தொழிலிலும் தர்மம் பேணுதல்

தொழிலாளி படத்தில் ஒரு தொழிலாளியாக தன் வாழ்க்கையைத் தொடங்கி மேல் மேலாளர் ஆக உயர்ந்து பின்பு கூட்டுறவு பஸ் சர்வீஸ் தொடங்கி அதன் பங்குதாரரர் என்ற நிலைக்கு உயர்வார். இவ் அனைத்து நிலைகளிலும் தத்தம் தொழிலுக்குரிய தர்மத்தை எம்.ஜி.ஆர். பின்பற்றினார்.

தொழிலாளி படத்தில் பேருந்தில் டிக்கெட் செக்கிங் செய்பவராக இருக்கும்போது, 'ஓட்டுனர் அதிவேகமாக ஓட்டக்கூடாது, நிறுத்தத்தில் கண்டிப்பாக வண்டியை நிறுத்த வேண்டும். அதை விட்டு சற்றுத் தொலைவில் அல்லது முன்பு நிறுத்தக்கூடாது, வயதானவர்கள் மற்றும் பெண்களிடம் பரிவு காட்ட வேண்டுகாட்சிகளை அமைத்து அவர் தனது தொழில் தர்மத்தைக் காப்பாற்றினார். .

'தொழிலாளி'யில் எம்.ஜி.ஆர். பேருந்து நடத்துனராக நடிக்கும் காட்சியில் வண்டியில் இருக்கை காலி இல்லை என்பதால் நிறுத்தத்தில் நிற்கும் தன தாயாரை கூட பேருந்தில் ஏற்ற மாட்டார். அக்காலத்தில் பேருந்துக்குள் யாரும் நிற்க அனுமதி



தொழிலாளி – எம்.ஜி.ஆர்.,

கிடையாது. நடத்துனராக இருக்கும்போதும் தொழில் நெறிமுறைகளைப் பின்பற்றினார்.

எம்.ஜி.ஆர். மேலாளரான பிறகு தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய சலுகைகளை முறைப்படி வழங்கினார். அதற்கு அடுத்த கட்டமாக தொழிலாளர்களுக்கு இழப்பீடு வந்ததும் அதனை முதலீடாக மாற்றி அவர்களை ஒன்றிணைத்து கூட்டுறவு பஸ் சர்வீஸ் என்று புதிய தொழிலைத் தொடங்க ஊக்கமளித்தார். இவ்வாறாக எம்.ஜி.ஆர். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரங்களில் மிகவும் நேர்மையான முறையில் தொழில் செய்பவராகவே வந்தார்.

## உண்மை வாழ்வில் தொழில் தர்மம் பேணுதல்

எம்.ஜி.ஆர். தனது நிஜ வாழ்விலும் தொழில் தர்மத்தைக் கடைப்பிடித்தார். அவர் நடிகராக இருக்கும்போது அனைவருக்கும் சமமான உணவு, முறையான ஊதியம், மரியாதை கிடைக்க வேண்டும் என்பதில் கவனமாகச் செயல்பட்டார். நடிகர் நடிகைகளுக்கு திருமணம் செய்யவும், அவர்களின் பிள்ளைகளை படிக்க வைக்கவும் தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார். படத்திலும் நிஜத்திலும் நடிகராக அரசியல் கட்சி தலைவராக முதல்வராக தன் தொழில் தர்மத்தை காப்பாற்றினார். அரசியலுக்கு வந்த பிறகு அவர் பொதுமக்களுக்கான பல நல்ல திட்டங்களை தீட்டி அவர்களின் மனம் நிறைவு அடையும் வகையில் அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்தினார்.



ஆயிரத்தில் ஒருவன் – ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்.



# முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்




## இந்நூல் பற்றி

**₹ 200/-**

இந்நூல், எம்.ஜி.ஆர். தனது படங்களில் தன்னுடைய கதாபாத்திரத்தை ஒரு முன்மாதிரி கதாபாத்திரமாக உருவாக்குவார். வக்கீல், மருத்துவர், விவசாயி, படகோட்டி, ரிக்ஷாக்காரன், குதிரை வண்டிக்காரன் என எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும் அந்தந்த தொழிலுக்குரிய நெறிமுறைகளைப் (தொழில் தர்மத்தை) பின்பற்றுவதில் உறுதியாக இருப்பார் என்பதை சான்றுகளுடன் விளக்குகிறது.